# தமிழர் பொருண்மியம்
வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=   இதழ் - 17   07.05.2023




மனிதகுலத்தை விஞ்சும் ஏஐ 09

வீ(நா)ட்டுக் கோழி 12

இலாபம் தரும் நிலக் கடலைச் செய்கை 18

# டுபாய்க்குச் செல்லும் யாழ். கதலி வாழை!

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



- பி.பார்த்தீபன் -

# டுபாய்க்குச் செல்லும் யாழ். கதலி வாழை!

யாழ்ப்பாண மக்களைப் பொறுத்த வரையில் கடந்த வாரம் முக்கியமான ஒரு வாரம். அவர்களுடைய நீண்ட கால கனவு நனவாகியிருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் பிரதான உற்பத்திப் பொருளான வாழைப்பழம் சுத்திகரிக்கப்பட்டு, பதப்படுத்தப்பட்டு சீப்பு - சீப்பாக வெட்டப்படு, பெட்டிகளில் மொதி செய்யப்பட்டு டுபாய்க்கு ஏற்றுமதியாகியிருக்கின்றது. புளி வாழை என்று சொல்லப்படும் யாழ்ப்பாண கதலி வாழைப் பழம் முதல் முறையாகச் சர்வதேச சந்தைக் குச் சென்றிருக்கின்றது.

தென்னிலங்கை வரை பிரபலமான யாழ்ப்பாண வாழைப்பழம் இப்போது சர்வதேசச் சந்தையிலும் பிரசித்தமாகிவிட்டது. யாழ்ப்பாண கதலி வாழைப்பழத்தை இந்த வாரத்திலிருந்து டுபாய் கடைகளில் வாங்க முடியும் என்பது யாழ்ப்பாண வாழைச் செய்கையாளர்களுக்கு நம்பிக்கையளிக்கும் ஒரு வெற்றிச் செய்தி.

நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் இருந்து டுபாய்க்கு வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்யும் திட்டம் கடந்த புதன்கிழமை - மே 3 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் நிலாவரைச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள வாழைக்குலை பதப்படுத்தல் நிலையத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட வாழைக்குலைகளே இவ்வாறு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன. கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய், தெல்லிப்பளை போன்ற பகுதிகள் வாழைச் செய்கைக்குப் பெயர் போனவை. கொள்முதல் செய்யப்படும் கதலி வாழைக்குலைகள் நிலாவரையில் உள்ள வாழைக்குலை பதப்படுத்தும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு, பெட்டிகளில் அடைக்கப்பட்டு அங்கிருந்து நேரடியாக கொழும்புத் துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு டுபாய்க்கு கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது.



### வாராந்தம் 10 ஆயிரம் கிலோ

இந்தச் திட்டத்தின் முதற்கட்டமாக 10,000 கிலோகிராம் வாழைப்பழத்தை வாரந்தோறும் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது முதலாவது கட்டம். இதன் அடுத்த கட்டமாக ஏற்றுமதித் தொகை அதிகரிக்கப்படலாம். முதலாவது கட்டம் எந்தளவுக்கு சிறப்பாக - வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது - அதற்கான வரவேற்பு எவ்வாறுள்ளது என்பதைப் பொறுத்து அடுத்த கட்டங்கள் அமையும் என எதிர்பார்க்கலாம். டுபாய் தவிர்ந்த வேறு சில நாடுகளிலும் வாழைப்பழங்களுக்கான சந்தை வாய்ப்புள்ளது.

வாராந்தம் பத்தாயிரம் கிலோவை வழங்குவது என்பது யாழ்ப்பாண வாழைக் குலைச் செய்கையாளர்களைப் பொறுத்தவரையில் கடினமான ஒரு பணியல்ல. வெளிநாட்டு சந்தை வாய்ப்பின் மூலமாக அதிக வருவாய் கிடைக்கின்றது என்பதால் அவர்கள் அதிகளவு உற்சாகத்துடனும் ஈடுபாட்டுடனும் உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களும் இருக்கின்றன. இதனால் உற்பத்தியின் அளவும், தரமும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

இந்த ஏற்றுமதித் திட்டத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்று - இது நூறு வீதம் இயற்கை விவசாய முறையில் செய்யப்படுகின்றது. இரசாயன உரங்கள் எதுவும் பயன்படுத்தப்படாமல் செய்கை பண்ணப்பட்ட வாழைப்பழங்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

### அரசாங்க அதிபர் கருத்து

இந்த ஏற்றுமதித் திட்டம் தொடர்பாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரத்திடம் கருத்துக் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். “விவசாய உற்பத்திகளை நவீன மயமாக்குவதன் மூலமாகப் பெருக்கிக்கொள்வதும், அவற்றுக்கு பெறுமதி சேர்ப்பதும் அவற்றை உலக சந்தைக்கு அறிமுகப்படுத்துவதும் ஒரு முக்கியமான செயற்பாடாகும். வடமாகாணத்தில் விவசாய நவீனமயமாக்கல் திட்டம் நீண்டகாலமாகச் செயற்படுத்தப்பட்டு வந்தாலும், இப்போதுதான் அது முக்கியமான மைல் கல்லை எட்டியிருக்கின்றது.

எங்களுடைய யாழ்ப்பாணத்துக்கே உரித்தான கதலி வாழைப்பழம் இப்போது ஏற்றுமதிப் பொருளாக மாறியிருக்கின்றது. விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலமாக இதனைச் செயற்படுத்தியிருக்கின்றார்கள். இந்தத் திட்டம் முன்மொழியப்பட்ட காலப்பகுதியில் நான் விவசாய அமைச்சின் செயலாளராக இருந்தேன். எங்களுடைய நீண்டகால எதிர்பார்ப்பு ஒன்று இதன் மூலமாக நிறைவேறியிருக்கின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.



எங்களுடைய யாழ்ப்பாண வாழைப் பழ உற்பத்தியாளர்களின் கதலி வாழைப் பழங்கள் இப்போது உலக சந்தைக்குச் செல்கின்றன. இது மட்டுமன்றி இது போன்ற வேறு சிலவற்றையும் இந்தத் திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருக் கின்றோம். அதற்கான பல முன்மொழிவு கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. குறிப் பாக, இங்குள்ள எங்களுடைய பழச் செய் கையை மேம்படுத்துவது, பழச்சாறு உற் பத்தி போன்ற பலவற்றை ஊக்குவித்து அவற்றை வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்று மதி செய்வதற்கான செயற்றிட்டங்களை முன்மொழிந்துள்ளோம். எங்களுடைய விவசாயிகள் இதன் மூலமாக நன்மைய டைய முடியும்.

இந்தத் திட்டம் இலங்கையில் இப்போது இரண்டு இடங்களில் செயற்படுத்தப்படு கின்றது. ஒன்று - இராஜாங்கனையில். இரண்டாவதாக இப்போது யாழ்ப்பாணத் தில் ஆரம்பிக்கப்பட்டிருப்பது.

யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தப்படும் திட்டத்தின் விஷேட அம்சம் என்னவென் றால், இந்த உற்பத்திகள் அனைத்தும் நூறு வீதம் இயற்கை விவசாயத்தின் மூல மாக விளைவிக்கப்படுகின்றன என்பது தான். அதனால், அதற்கு நிறைவான ஒரு சந்தைவாய்ப்பு ஏற்படும் என்று நான் நம் புகின்றேன்."

இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்க அதி பர் தெரிவித்தார்.

**அந்நியச் செலாவணி**

இதன்மூலமாக எமது விவசாயிகள் அதிகளவுக்கு வருமானத்தைப்பெற்றுக்கொள் ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. அண் மைக்காலம் வரையில் வாழைச்செய்கை யில் ஈடுபடும் விவசாயிகள் போதிய வருமா னத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலை இருந்தது. கதலி வாழை கிலோ 100 ரூபாவுக்குள்தான் விற்பனையாகி யது. உற்பத்தியாளர்கள் கடைகளுக்குக் கொடுக்கும்போது அதனையும் விடக் குறைந்த விலைக்குத்தான் கொடுத்தார் கள். இதனால் போதிய வருமானத்தை வருமானத்தை அவர்களால் பெற முடிய வில்லை.

> யாழ்ப்பாண உற்பத்தியாளர்களின் கதலி வாழைப்பழங்கள் இப்போது உலகச் சந்தைக்குச் செல்கின்றன. இது மட்டுமன்றி இது போன்ற வேறு சிலவற்றையும் இந்தத் திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருக்கின்றோம். அதற்கான பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாகப் பழரசங்களை உற்பத்தி செய்வதும் ஏற்றுமதி செய்வதும் முன்மொழியப்பட்ட திட்டங்களில் ஒன்று..



இப்போது வருமானம் உறுதிப்படுத்தப் படுவதால், இந்த முயற்சியில் மேலும் பலர் இறங்குவதற்கான வாய்ப்புள்ளது. வேலை வாய்ப்பை அதிகரிக்கும் அந்நியச் செலா வணி வருமானமும் இதன்மூலமாக அதிகரிக்கும். பதப்படுத்தல் - பொதியிடல் - ஏற்றுமதிச் செயற்பாடு என்பனவற்றின் மூலம் மேலும் ஒரு தொகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கின்றது. இந்த அனுபவம் யாழ்ப்பாண மக்களுக்கு புதி தானதாக இருந்தாலும், மேலும் விடயங் களில் இந்த அனுபவம் அவர்களுக்கு உத வலாம்.

ஏற்கனவே சீனாவிலிருந்தும் வாழைப் பழத்துக்கான கேள்வி இருந்தது. இராஜாங் கனையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படு வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கடந்த நவம்பர் மாதத்திலிருந்து டுபாய்க் கும் இராஜாங்கனையிலிருந்து வாழைப் பழம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

**மின்மடல் : tamilseconomy@gmail.com**
**தொலைபேசி : 0764438620**

# கடன் மறுசீரமைப்பும் மக்களின் அச்சமும்

இலங்கையில் கடந்த வருடத்தில் உச்சகட்டத்துக்குச் சென்றிருந்த பொருளாதார நெருக்கடி இப்போது தீர்க்கப்பட்டு விட்டது போன்ற ஒரு தோற்றம் காட்டப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியம் வழங்கிய கடனுதவியைக் கொண்டு உடனடியான பிரச்சினைகள் சில தீர்க்கப்பட்டுள்ளன. எரிபொருட்களும் எரிவாயும் கிடைக்கின்றன என்பது பிரச்சினை தீர்ந்துவிட்டது என்பதை வெளிப்படுத்தவில்லை. சீனாவின் கடன் பொறிக்குள் விழுந்துகிடந்த இலங்கை, இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் கடன்பொறிக்குள் விழுந்துவிட்டது என்பதுதான் உண்மை. இந்தக் "கடன் குண்டு" மீண்டும் வெடிக்காது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை.

இதனைவிட மற்றொரு விடயத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தெரிவித்திருந்தார். அதாவது, வெளிநாட்டு கடன்களை மறுசீரமைப்புச் செய்வதற்கு ஐ.எம்.எப். உதவியிருக்கின்றது. கடன்கொடுத்த நாடுகளுடனும் பேச்சுக்களை நடத்தி மறுசீரமைப்புக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இதன் அடுத்த கட்டமாக உள்நாட்டில் பெற்றுக்கொண்ட கடன்களுக்கு மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்பதுதான் ஜனாதிபதி சொன்ன தகவல்.

கடன் மறுசீரமைப்பு என்பது பல விடயங்களை உள்ளடக்கியது. ஒன்று – கடன்களை முழுமையாக அல்லது ஒரு பகுதியை இரத்துச்செய்தல். இரண்டு – வட்டியை இரத்துச்செய்தல். மூன்று – மீளச் செலுத்த வேண்டிய காலத்தை நீடித்தல். இது போன்ற பல விடயங்களை உள்ளடக்கியதுதான் "கடன் மறுசீரமைப்பு" என பொருளாதார நிபுணர்களால் குறிப்பிடப்படுகின்றது. இலங்கைக்கு கடன்கொடுத்த நாடுகள் அதனை மறுசீரமைப்பு செய்ய இணங்கியதால்தான், ஐ.எம்.எப். தன்னுடைய முதலாவது தொகுதி உதவியை கொடுத்திருக்கின்றது.

இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளிடமிருந்து மட்டும் கடன்களைப் பெறவில்லை. உள்நாட்டிலிருந்தும் பெருமளவு கடன்களைப் பெற்றிருக்கின்றது. அவை, டொலரிலும் ரூபாவிலும் பெறப்பட்டிருக்கின்றன. ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பதற்றில் வைப்பிலிடப்பட்டுள்ள பணத்திலிருந்தே அதிகளவு கடன்கள் பெறப்பட்டுள்ளன. அதனைவிட, வங்கிகளின் நிலையான வைப்புக்களிலிருந்தும் அரசாங்கம் கடன் பெற்றிருக்கின்றது. அந்தக் கடன்களையும் உடனடியாகத் திருப்பிக்கொடுக்கக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை. அதனால் அவற்றையும் மறுசீரமைப்புச் செய்வதற்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றது.

ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் கைவைப்பது நிச்சயமாக நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும். தனியார் துறை ஊழியர்களின் ஒரே சேமிப்பு அதுதான். அதேபோல, வங்கி வைப்புக்களில் கைவைத்தால் வங்கிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும். அதனைவிட, மக்களும் குழப்பத்துக்குள்ளாவார்கள். ஆக, இந்த விடயத்தை அரசாங்கம் மிகவும் நிதானமாக அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படாமலிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் முன்னெடுக்க வேண்டும்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## பயனுள்ள பொருளாதார தகவல்

கடந்த வாரத் தமிழர் பொருண்மியம் வாரஇதழ் பயனுள்ள பல கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்திருந்தது. குறிப்பாக, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின்போது வங்கித்துறை பாதிக்கப்படுமா என்னும் கட்டுரை தற்போதைய நிலையில் வெளியே தெரியாமல் உருவாகிவரும் ஒரு பிரச்சினையைத் தெளிவாக விளக்கியிருந்தது. பொருளாதாரத்துறை மாணவர்களுக்கும் பயனுள்ள சமகாலப் பிரச்சினையை விளக்கும் ஒரு கட்டுரையாக அது இருந்தது. அதுபோலவே, சுவாமிநாதன்சர்மா எழுதிய, ஏன், எவ்வாறு? வரி செலுத்த வேண்டும்? என்ற கட்டுரையும் பொருளாதார, நிதித்துறை மாணவர்களுக்கு மட்டுமன்றி வர்த்தகத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் பயனுள்ள பல தகவல்களைத் தருவதாக அமைந்திருந்தது. இது போன்ற விடயங்களைத் தொடந்து தாருங்கள்.

**எம்.புவனேஸ்வரன், பேராதனைப் பல்கலைக்கழகம், கண்டி.**

●●●

## எம்மவர்களின் படைப்பாற்றல்

உங்களுடைய வார இதழை தொடர்ச்சியாக மின்னிதழாகப் படித்து வருகின்றேன். நாங்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தாயகத்தில் இடம் பெறும் பொருளாதார – சுயதொழில் முயற்சிகளை அறிந்துகொள்வதற்கு தமிழர் பொருண்மியம் தொடர்ந்தும் உதவுகின்றது. அந்த வகையில் கடந்த வாரம் வெளியான பனை உற்பத்திகளில் சாதிக்கும் அயம் நிறுவனத்தைப் பற்றிய கட்டுரை எம்மை பெரிதும் கவர்ந்தது. தாயகத்தில் உள்ள எம்மவர்கள் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு தங்களுடைய படைப்பாற்றலை எந்தளவுக்கு முன்னேற்றியிருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும் போது ஆச்சரியமாகவும் இருந்தது. பெருமையாகவும் இருந்தது. இது போன்ற உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்கமளித்து அவர்களுக்கு உதவக்கூடிய கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டுவரும் பொருண்மியம் வெளியீட்டாளர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

**பிரமீளா மனோகரன், – டென்மார்க்**

## தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...

### சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி –

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

-----------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - -----------------------------------------------------
**முகவரி** - ---------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - -------------------------------------
**சந்தாக் காலம்** - ---------------------------------------------
**செலுத்திய தொகை** - -----------------------------------------
**செலுத்திய திகதி** - -------------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,69,500 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,84,900 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி** - பணவீக்கம் குறைந்திருப்பது பொருளாதாரம் முன்னேற்றமடைந்திருப்பதற்கான ஒரு அறிகுறியாகக் கொள்ளலாமா?

**என்.பரமேஸ்வரன், வல்வெட்டித்துறை.**

**பதில்** - அவ்வாறும் சொல்ல முடியும். ஆனால், மக்களுடைய கொள்வனவு ஆற்றல் குறைவடைந்து, பொருட்களை அவர்கள் கொள்வனவு செய்வது குறைவடைந்திருப்பதும் இதற்கு காரணமாக இருக்கலாம். அதாவது கேள்வி குறைவடையும் போது பொருட்களின் விலைகளும் குறைவடையும்.

கடந்த மாதம் தமிழ் – சிங்கள புத்தாண்டு கொண்டாடப்பட்டது. இப்போது வெசாக் கொண்டாட்டம் இடம்பெற்றது. இவ்வாறான தினங்களில் தென்னிலங்கையில் வழமையாக இடம்பெறும் வியாபாரத்தை இம்முறை காண முடியவில்லை. இதற்கு பிரதான காரணம் மக்களிடம் கொள்முதல் சக்தி (பணம்) இல்லாததது அல்லது மிக வும் குறைவாக இருப்பது.

இவ் வாறான நிலைமைகளில் மிகவும் அவசியமான பொருட்களை மட்டும் - அது வும் குறைந்தளவில் அவர்கள் கொள்வ னவு செய்வார்கள்.

இது பணவீக்கம் குறை வடைந்திருப்பது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தலாம். இதற்கு பொருளாதாரம் முன்னேற்றமடைந்திருக் கின்றது என்று ஒரேயடியாக அர்த்தப் படுத்திவிட முடியாது.

**கேள்வி** - ஐ.எம்.எப். கொடுத்துள்ள நிபந்தனைகள் அனைத்தையும் அரசாங்கம் நிறைவேற்றும் என எதிர்பார்க்கலாமா?

**சுதா மயில்வாகனம்,**
**திருகோணமலை.**

**பதில்** - கடந்த காலங்களில் அவ்வாறு கொடுக்கப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டதாக வரலாறு இல்லை. அதனால்தான் நாணய நிதியத்திடமிருந்தான நலன்களை இலங்கையால் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. இப்போது நிபந்தனைகள் நிறைவேற்றப்படுவதைப் பொறுத்து பகுதி பகுதியாகத்தான் இந்தக் கடன்களை அவர்கள் கொடுக்கப்போகின்றார்கள்.

ஆனால், தமது அரசியலுக்கு பாதிப்பில்லாத நிபந்தனைகளை அரசாங்கம் நிறைவேற்றும். குறிப்பாக - சமுர்த்தி பயனாளிகளில் 30 வீதமானவர்கள் அதனைப் பெறுவதற்கான தகுதி இல்லாதவர்கள் என்பது நாணய நிதியத்தின் கணிப்பு. அவர்களை அதிலிருந்து நீக்க வேண்டும் என்பதும் ஒரு நிபந்தனையாக இருந்தது. ஆனால், அதனை அரசாங்கம் செய்யவில்லை.

சமூர்த்தி பயனாளிகளில் பலர் அரசியல் ரீதியாக தெரிவானவர்கள் என்ற கருத்து உள்ளது. அவர்களை நீக்கினால், அடுத்த தேர்தலுக்கு அவர்கள் வேலை செய்யமாட்டார்கள். இது பதவியிலுள்ளவர்களைப் பாதிக்கும். இது போன்றவைகளை செய்வதில் அரசு தயங்குவதால் நாணய நிதிய உதவிகளில் பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

## கேளுங்கள் தருகின்றோம்

**தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -**
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 160/= |
| உருளைக்கிழங்கு | - 200/= |
| பச்சைமிளகாய் | - 150/= |
| தக்காளி | - 400/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 240/= |
| கோவா | - 250/= |
| கரட் | - 160/= |
| பூசணி | - 60/= |
| புடோல் | - 120/= |
| வாழைக்காய் | - 100/= |
| சின்ன வெங்காயம் | - 350/= |
| பெரிய வெங்காயம் | - 150/= |
| பாகற்காய் | - 800/= |
| வெண்டக்காய் | - 200/= |
| கருணைக்கிழங்கு | - 180/= |
| பயற்றங்காய் | - 800/= |
| லீக்ஸ் | - 280/= |
| பீற்றூட் | - 240/= |
| கறிமிளகாய் | - 200/= |
| முருங்கைக்காய் | - 1000/= |
| போஞ்சி | - 450/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர்- | 207/= |
| கனடா டொலர் - | 228/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 345/= |
| ஜப்பான் யென் - | 2.3/= |
| சிங்கப்பூர்டொலர் - | 234/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 392/= |
| சுவிஸ் பிராங் - | 351/= |
| அமெரிக்க டொலர் - | 312/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 220/= |
| கனடா டொலர் - | 241/= |
| சீன யுவான் - | 48/= |
| யுரோ - | 363/= |
| ஜப்பான் யென் - | 2.4/= |
| சிங்கப்பூர் டொலர் | 247/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 412/= |
| சுவிஸ் பிராங் - | 372/= |
| அமெரிக்க டொலா - | 326/= |

# கூவில் பனங்கட்டி

## – ஊர்ச்சங்கதி –



பனம் பண்டங்களுக்கும் கூவில் கிராமத்திற்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உண்டு. பனம் பண்டங்களைப் போலவே அந்த ஊர் மனிதர்களும் பாரம் பரியமானவர்கள். அதற்காக அவர்கள் இனிப்பானவர்கள் மட்டும் கிடையாது. வீரத்திற்கும் பேர் போனவர்கள். புலியை முறத் தால் விரட்டிய பெண்களை நாங் கள் வரலாற்றில் தான் பார்த்தி ருப்போம். ஆனால் இங்கே தம்மை அடக்க வருவோரை மிகச் சாதாரணமாகப் பெண்கள் அடக்கிய வரலாறுகள் பல உள் ளன. இது நிற்க, எல்லோராலும் அதி கம் விரும்பப்படுகின்ற பனம் பொருட்களில் மிகவும் பணம் காய்ச்சியான பனங்கட்டி பற்றிய பேச்சு வந்தபோது சண்முகத்தார் தனது பழைய நினைவுகளைக் கிளறி விட்டார்........

அந்தக் காலத்தில் கீரிமலை யின் கூவில் கிராமத்தில் ஆச்சி மாமியின் தயாரிப்பில் வரும் பனங்கட்டிக்கு என்று ஒரு தனி மவுசு எப்போதுமே இருந்தது. பனையை வாழ்வாதாரமாகக் கொண்ட பல தொழிலாளர்கள் வாழ்ந்த இந்த பூமியில் இன்று பல வைத்தியர்களும் இயந்தி ரவியலாளர்களும் பொறியியலா ளர்களும் வருவானாலும் கூட அவர்களை ஆளாக்கியது இந்தப் பனைகள் தான் என்று நெகிழ்ந்து போகிறார் சண்முகத்தார்.

ஒரு காலத்தில் கூவில் பனங்கள்ளு மிகவும் பிரபலமாய் இருந்தது. மரத்தால் இறக்கியவுடன் நுரை ததும்ப ததும்ப பனை யோலை பிழாவில் வார்த்து மீசை நனைய குடிக்கும் பனங்கள்ளுக்காகவே தூர இடங் களில் இருந்து கூவிலை தேடி பல பேர் வருவதுண்டு. அப்படி வந்தவர்கள் பல பேரைக் கூவில் வாழ வைத்த கதையும் நிறையவே இருக்கிறது. இப்படித்தான் அதிக இயக்கங்கள் அங்கேயும் இங்கேயு மாக ஓடி திரிஞ்ச காலம். எந்த நேரம் என்ன நடக்குமோ என்று தெரியாத நேரங்களி லும் ஆச்சிமாமியின் அடுப்பு மட்டும் எப்போ தும் எரிந்து கொண்டே இருக்கும். வீட்டிற் குள்ளேயே 10 15 கோப்பைகள் நிரப்பப்பட இருந்தாலும் வெளியில் இருந்து வரும் பசித்த வயிறுகளுக்கும் அன்னமிடும் பெருந்தாய் அவள். அவள் கையால் காய்ச் சும் பனங்கட்டி மட்டும் கசக்குமா என்ன? இப்போதெல்லாம் பனங்கட்டி என்ற பெயர் களில் பல வெல்லங்கள் விற்கப்பட்டாலும் தற்போதும் கூவிலில் தயாரிக்கும் பனங் கட்டிகளுக்குத் தனி மவுசு இருக்கிறது.

புது வேலிகளை அமைக்கும்போது தறிக்கப்படும் பெரும் பெரும் பூவ ரசம் குற்றிகளைப் பிளந்து, பிரத்தி யேகமாகத் தயார் செய்யப்பட்ட அடுப்புக்குள் வைக்கும்போது தக தகவெனத் தகிக்கும் தணல் களையும் மீறி அனல் கொதிக்கும் அடுப்பின் மேல் இட்ட அட்சய பாத்திரம் போன்று பெரிய கிடா ரத்தில் அந்த ஊரின் பெரும் சீவல் காரர்களால் இறக்கப்பட்ட கருப் பணி கொதித்துக் கொண்டிருக் குமாம். பல தொழிலாளிகளிடம் இருந்து சேகரிக்கப்பட்ட பதநீர் வித விதமான கான்களில் வந்து சேரும். அவற்றை வடித்து கிடா ரத்தில் ஊற்றிக் கிளறிக் கொண்டி ருக்க அந்த பதப்படுத்தலில் வரும் வாசனை ஆச்சிமாமியின் படலை தாண்டி வீசுமாம். இடைக்கிடை அன்னமாரையும் அக்கம் பக்கத்து பெண்களையும் துணைக் களைத்தபடி அசுவதி என்கிற ஆச்சிமாமியின் கைவண்ணத் தில் உருவாகும் பனங் கட்டியின் மீது எப்போதும் பெரும் காதல் எனக்கு என்கிறார்கள்.

ஆனால் இப்போது மிக மிக அரிதாகத்தான் நல்ல பனங்கட்டி கள் கிடைக்கின்றன. சீவல் தொழி லாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தது போலவே பனையின் வளங்களும் நம்மிடம் குறைந்து போய்விட்டன. நாங்கள் வெளிநாடுகளில் இருந்து வரும் தின்பண்டங்களையும் நுகர்வுப் பொருட்களையும் விரும்பிக் கொள்வது செய்யும் பழக்கத்திற்குள் அடிமைப்பட்டு போனோம் எது அப்படி இருந்தாலும் எனக்கு காலையில எழும்பி மனிசியின்ர கையால நல்ல தேத்தண்ணி குடிக்கிற துக்கு நல்ல பனங்கட்டி வேணும். ஆக, நான் கீரிமலையில் இருக்கும் பனை அபி விருத்தி சங்கத்தின் தொழில் கூடத்துல வாங்கலாம் என்று கேள்விப்பட்டன், வாங்கி போட்டு மறுபடி சந்திக்கும்போது அவை பற்றி உங்களுக்குச் சொல்லுகி றேன் என்றபடி நடக்க தொடங்கினார் சண்முகத்தார்.

## வரி விளம்பரம்

## classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுச் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு 0766482303

---

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு - 0777421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை பெற்றுக் கொள்ள - 779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் — classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள அழையுங்கள். - 0772034807

-------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

-------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களை பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

-------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கி தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 075378053

-------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளை பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

-------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்வது எங்களை அழைக்கவும்
0766996628

-------------------------------------

### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

-------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

-------------------------------------

### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றி அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 773078799

-------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

-------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாக சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டடப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடரபுக்கு 0773024473

-------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்து தரப்படும்.
0775652282

-------------------------------------

சிறிய குடும்பம் ஒன்று வசிப்பதற்கு யாழ் மாவட்டத்தில் உள்ள மருதனார்மடம், இணுவில், சுதுமலை, உரும்பிராய், உடுவில், கோண்டாவில் ஆகிய ஏதேனும் இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு - 071-0368973/ 075-4974782

-------------------------------------

### கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழி பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

-------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. -
0772469113

### சேவை

பிறந்தநாள் மற்றும் விஷேட நிகழ்வுகளுக்கு நீங்கள் விரும்பும் மேடை அலங்கலாம், புதிய உருவ அலங்காரங்கள் குறைந்த செலவில் தெய்துகொடுக்கப் படும்.
தொடர்பு - மாத்தி யோசி 077 0775907







- சோம வள்ளியப்பன் -

# மனிதகுலத்தை விஞ்சும் ஏஐ: கடிவாளத்துக்கான தருணம்

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் மூலம் உலகம் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த, 'ஏஐ' யுக அபாயங்களை எப்படித் தவிர்ப்பது?' என்ற கடந்த வாரக் கட்டுரை பல முக்கியத் தகவல்களைப் பதிவுசெய்திருந்தது. கூகுள் தலைமை நிறுவனத்தின் தலைமைச் செயல்அதிகாரி சுந்தர் பிச்சை சமீபத்தில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பேசியபோது, செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி குறித்து ஆக்க பூர்வமான நம்பிக்கையை வெளிப்படுத்தினாலும், அதில் பொதிந்திருக்கும் புரியாத பகுதிகள் குறித்துக் கவலை தெரிவித்தார்.

சர்வதேச ரீதியாக வர்த்தகத்திலும், பொருளாதாரத்திலும், வேலைவாய்ப்பு போன்றவற்றிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாக இது இருப்பதால் இதனையிட்டு இந்த வாரமும் பார்ப்போம்.

இத்தொழில்நுட்பம் குறித்துப் புகழ்பெற்ற இயற்பியல் அறிவியலாளர் ஸ்டீவன் ஹாக்கிங் கூறியிருந்த கருத்துக்களும் நினைவுகூரத்தக்கவை. 'மனிதர்கள் எழுதும் கணினி நிரல்கள் **(program)** மூலம், உள்ளீடு செய்யப்படும் அறிவை வைத்துக் கொண்டு செயல்படுகிற ஏஐ தொழில்நுட்பமானது, அதை எழுதுபவர்கள் சொல்லாமலேயே, சுயமாகச் சிந்திக்கவும் புதிய நிரல்களை எழுதிக்கொள்ளவும் ஆரம்பித்துவிடும் ஆபத்து இருக்கிறது' என்பது ஹாக்கிங்கின் கருத்து. அதற்கான அறிகுறிகளும் தற்போது தென்படத் தொடங்கிவிட்டன.

## அதிர்ச்சித் தகவல்

சமீபத்தில் கூகுள் நிறுவனத்தில் ஒரு குறிப்பிட்ட ஏஐ நிரலுக்காக வங்காள மொழி தேவைப்பட்டது. நிரல் எழுதிய குழுவினர், அதற்கு வங்காள மொழியைக் கற்றுக் கொடுத்திருக்கவில்லை அது தேவையென்றும் சொல்லவில்லை. ஆனால், நிரலில் ஓரிரு வங்காளச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அந்த நிரல் தானாகவே வங்காள மொழியைக் கற்றுக்கொண்டு செயல்பட்டிருக்கிறது என்பதை அறிந்த குழுவினர் அதிர்ச்சியடைந்தனர்.

இந்தத் தகவலைக் கூகுள் நிறுவனத்தின் தொழில்நுட்பம் மற்றும் சமுதாயம் பிரிவின் மூத்த உதவித் தலைவர் ஜேம்ஸ் மன்யிகா தெரிவித்திருக்கிறார். "இது எங்களுக்கே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது" என்று கூறியிருக்கும் சுந்தர் பிச்சை, இத்தொழில்நுட்பம் புரிந்துகொள்ள முடியாததாக இருக்கிறது எனும் பொருள்படும்படி 'பிளாக் பாக்ஸ்' என்று ஒரு பதத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்.

சமீபத்தில் சாம்சங் நிறுவனப் பொறியாளர்கள், தாங்கள் எழுதியிருந்த ஒரு மூலக் குறியீட்டில் (Source Code) இருந்த தவறுகளைக் கண்டறிந்து சொல்ல சாட்ஜிபிடியிடம் (ChatGPT) கேட்டிருக்கிறார்கள். கடைசியில், சாம்சங் நிறுவனத்தின் மிக முக்கியமான தகவல் ஒன்றையும் அந்தச் செயற்கை நுண்ணறிவு மென்பொருள் தெரிந்து வைத்திருப்பதை அறிந்து அதிர்ந்திருக்கிறார்கள்.

செயற்கை நுண்ணறிவு என்பது, மனிதர்கள் யோசித்ததை மிக வேகமாக, துல்லியமாகத் தொடர்ச்சியாக இயந்திரங்கள் செய்வதற்கான ஏற்பாடு. அப்படிப்பட்ட உயர்நிலை நிரல்களில், மனிதர்கள் எழுதாத நிரல்களைக்கூட, தேவை என்று ஏஐ இயந்திரங்கள் நினைத்தால் தாமாகவே அவற்றையும் எழுதிச் செயல்படுத்தக்கூடும் என்பதுதான் ஆபத்தானதாகக் கருதப்படுகிறது.

## எச்சரிக்கைக் குரல்கள்

ஆக, தொடர் வளர்ச்சியில் ஏஐ மனிதர்களுக்கு அடங்காத பெரும் சக்தியாக மாறும் ஆபத்து இருக்கிறது. தவறானவர்களின் கையில் கிடைத்தால் அது பல விதங்களில் மனிதகுலத்துக்கு ஆபத்தாக முடியும். கூகுள், மைக்ரோசாஃப்ட், டெஸ்லா உள்ளிட்ட பல முன்னணி நிறுவனங்கள் இதைப் புரிந்துகொண்டிருக்கின்றன. அதனால்தான், இந்தத் துறையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் கண்காணிக்கப்பட வேண்டும் எனும் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் முன்னோடிகளில் ஒருவரான ஜெஃப்ரி ஹின்டன் (Geoffrey Hinton), சமீபத்தில் கூகுள் நிறுவனத்திலிருந்து விலகிய கையோடு, சாட்ஜிபிடி போன்ற மென்பொருள்கள் எதிர்காலத்தில் மனிதர்களைவிடவும் அறிவு மிகுந்தவையாக ஆகிவிடலாம் என எச்சரித்திருக்கிறார். ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்ட வல்லுநர்கள் இது குறித்து விரைவாகக் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இதன் தீவிரத்தன்மையை உணர்ந்துதான், ஏப்ரல் 30 அன்று நடைபெற்ற ஜி7 நாடுகளின் கூட்டமைப்புக் கூட்டத்தில், சாட்ஜிபிடியின் ஆபத்து குறித்தும் அதன் வளர்ச்சியையும், பயன்பாட்டையும் நெறிப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் அந்நாடுகளின் தலைவர்கள் விவாதித்திருக்கிறார்கள்.

காப்புரிமை, வெளிப்படைத்தன்மை தொடர்பான சிக்கல்கள், அந்நியச் சக்திகள் தகவல்களைத் தவறாகப் பயன்படுத்துவது தொடர்பான ஆபத்துகளைத் தடுப்பதற்கான சட்டங்களை இயற்ற வேண்டும் என்று முடிவுசெய்திருக்கிறார்கள். செயற்கை நுண்ணறிவுச் சட்டம் (AI Act) ஒன்றைக் கொண்டுவரவும் முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

எந்த ஒரு தொழில்நுட்பத்துக்கும் கடிவாளமும் கண்காணிப்பும் அவசியம். வளர்ந்த நாடுகள் அங்கம் வகிக்கும் ஜி7 இதற்கான முயற்சியில் இறங்கியிருப்பது மிகுந்த நம்பிக்கையளிக்கிறது.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்




*அரசியல்வாதிகள் நேர்மையுடன் செயல்படுவதும், பொது நலனுக்குச் சேவை செய்வதற்கான அவர்களின் திறனை சமரசம் செய்யக்கூடிய எந்தவொரு தனிப்பட்ட பலனைப் பெறும் நடவடிக்கைகளினை தவிர்ப்பதும் முக்கியம். அவ்வாறு செய்வதன் மூலம், அவர்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையை வளர்க்கவும், ஜனநாயக செயல்முறை அனைவருக்கும் நியாயமானதாகவும் இருப்பதை உறுதிசெய்ய உதவ முடியும்*

# இலஞ்சம் இல்லாத இலங்கை

இலஞ்சம் என்பது ஓர் உதவி, செல்வாக்கு அல்லது நன்மைக்கு ஈடாக மதிப்புமிக்க ஒன்றைக் கொடுப்பது அல்லது பெறுவது. பொதுவாக இலஞ்சம் என்பது அதிகாரம் அல்லது அதிகாரப் பதவியில் உள்ள ஒருவருக்குப் பொது அதிகாரி அல்லது பெருநிறுவன நிர்வாகி போன்ற ஒருவருக்கு அவர்களின் முடிவுகள் அல்லது செயல்களைப் பாதிக்கும் வகையில் பணம், பரிசுகள் அல்லது பிற சலுகைகளை வழங்குவதை உள்ளடக்குகிறது. பெரும்பாலான நாடுகளில் இலஞ்சம் சட்டவிரோதமானது மற்றும் நிறுவனங்களின் ஒருமைப்பாட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும். மற்றும் பொது நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் ஊழலாகக் கருதப்படுகிறது. இலஞ்சம் பல வடிவங்களை எடுக்கலாம், இதில் கொடுப்பனவுகள் மற்றும் மோசடி, பொது மற்றும் தனியார் துறைகளில் ஏற்படலாம்.

### இலஞ்சத்திற்கான காரணம் என்ன?

இலஞ்சம் பெரும்பாலும் தனிப்பட்ட ஆதாயம் அல்லது நன்மைக்கான ஆசையால் தூண்டப்படுகிறது. இது பல்வேறு வடிவங்களை எடுக்கலாம், ஆனால் அடிப்படை உந்துதல் பொதுவாக ஒரு தயவு, செல்வாக்கு அல்லது சட்டபூர்வமான வழிமுறைகள் மூலம் பெறப்படாத ஒரு முடிவுக்கு ஈடாக மதிப்புமிக்க ஒன்றை வழங்குவது அல்லது பெறுவது ஆகும். சில சந்தர்ப்பங்களில், தனிநபர்கள் ஒப்பந்தங்களைப் பெறுவதற்கும், அனுமதிகளைப்பெறுவதற்கும் அல்லது சட்டரீதியான விளைவுகளைத் தவிர்ப்பதற்கும் இலஞ்சம் வழங்கலாம். மற்ற சந்தர்ப்பங்களில், தனி நபர்கள் சில ஆதாரங்களுக்கான அணு கலை வழங்க அல்லது அவர்களுக்கு ஆதரவாக ஒரு முடிவை பாதிக்க இலஞ்சம் பெறலாம்.

### பொருளாதாரத்தில் இலஞ்சத்தின் தாக்கம்

இலஞ்சம் குறுகிய கால மற்றும் நீண்ட கால இரண்டிலும் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இ லஞ்சம் பொருளாதாரத்தை பாதிக்கும் சில வழிகள்:

வியாபாரம் செய்வதற்கான செலவை அதிகரிக்கிறது:

நிறுவனங்கள் இலஞ்சத்தில் ஈடுபடும் போது, சந்தையில் முன்னேறக் கூடுதல் செலவுகளைச் செலுத்துகின்றன. இந்த செலவுகள் நுகர்வோருக்கு அனுப்பப்படலாம், இது பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான அதிக விலைக்கு வழிவகுக்கும்.

வெளிநாட்டு முதலீட்டைக் குறைக்கிறது:

இலஞ்சம் ஒரு நாடு பெறும் வெளிநாட்டு முதலீட்டின் அளவைக் குறைக்கும். ஊழல் பரவலாக உள்ள நாடுகளில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்வது குறைவு, ஏனெனில் இது அவர்களின் முதலீடு ஊழல் நடைமுறைகளால் குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படும் அபாயத்தை அதிகரிக்கிறது.

ஒரு சீரற்ற முறைமையினை உருவாக்குகிறது:

இலஞ்சம் சில நிறுவனங்கள் தங்கள் போட்டியாளர்களை விட நியாயமற்ற நனமையைப் பெற அனுமதிக்கிறது, குறிப்பாக அரசாங்க ஒப்பந்தங்கள் அல்லது உரிமங்களுக்கான ஏலத்தில். இது போட்டியைத் தடுக்கலாம், புதுமைகளை ஊக்கப்படுத்தலாம் மற்றும் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தைக் குறைக்கலாம்.

நிறுவனங்கள் மீதான நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது:

நீதித்துறை மற்றும் சட்ட அமுலாக்கத்துறை உட்பட அரசு நிறுவனங்களின்



மீது இலஞ்சம் பொதுமக்களின் நம்பிக்கையைச் சிதைக்கிறது. இது சட்டத்தின் ஆட்சி சீர்குலைவதற்கு வழிவகுக்கும், இது சமூக அமைதியின்மை மற்றும் உறுதியற்ற தன்மைக்கு வழி வகுக்கும்.

அரசாங்க வருவாயைக் குறைக்கிறது:

இலஞ்சம் என்பது பெரும்பாலும் வரி ஏய்ப்பு மற்றும் அரசாங்க வருவாயின் பிற வடிவங்களை உள்ளடக்கியது. இது சமூக சேவைகள், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பிற பொதுப் பொருட்களுக்கான நிதியைக் குறைக்கும்.

**இலங்கை பொருளாதாரத்தில் இலஞ்சத்தின் தாக்கம்**

இலஞ்சம் மற்றும் ஊழலானது இலங்கையில் நீண்டகால பிரச்சினையாக இருந்து வருகின்றதுடன், பொருளாதாரத்தில் அவற்றின் எதிர்மறையான தாக்கம் குறிப்பிடத்தக்கதாகும். சமீபகால இலஞ்ச நடவடிக்கைகள் இந்தப் பிரச்சனையை மேலும் தீவிரமாக்கி, நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களை மேலும் பலவீனப் படுத்தியுள்ளன.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற பிணைமுறி மோசடியில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் மற்றும் பல அதிகாரிகள் ஈடுபட்டதாகக் கூறப்படும் இலஞ்சம் தொடர்பான வழக்குகளில் இலங்கையில் அண்மைய ஆண்டுகளில் இடம்பெற்றுள்ள முக்கியமான இலஞ்ச வழக்குகளில் ஒன்றாகும். அரசாங்கத்திற்குக் கணிசமான நிதி இழப்பை ஏற்படுத்துகிறது.

பிணைமுறி மோசடி, ஊழலின் ஏனைய நிகழ்வுகளுடன், இலங்கையின் பொருளாதாரம் மீதான முதலீட்டாளர்களின் நம்பிக்கையை இழக்க வழிவகுத்தது. இது, நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதில் இலங்கைக்குச் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், இலஞ்சமும் ஊழலும் அரசாங்க நடவடிக்கைகளில் திறமையின்மை மற்றும் விரயத்திற்கு பங்களிக்கின்றன, வளங்களை உற்பத்தி பயன்பாட்டிலிருந்து திசை திருப்புகின்றன மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன.

ஒட்டுமொத்தமாக, இலஞ்ச நடவடிக்கைகள் இலங்கையின் பொருளாதாரத்தில் கணிசமான பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதும், இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது நாட்டின் நீண்டகால வளர்ச்சி மற்றும் செழிப்புக்கு முக்கியமானதாக இருக்கும் என்பது தெளிவாகிறது. ஊழலைக் கையாள்வதற்கும், பொது வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**அரசியல்வாதிகளின் பொறுப்பு என்ன?**

அரசியல்வாதிகளுக்கு சட்டத்தை நிலைநிறுத்தவும், தம்முடைய வாக்காளர்களின் நலனுக்காகவும் செயல்பட வேண்டிய பொறுப்பு உள்ளது. இலஞ்சம் இது ஒரு சட்டவிரோத நன்மை அல்லது தயவுக்கு ஈடாக மதிப்புமிக்க ஒன்றை வழங்குவது அல்லது பெறுவது சட்டவிரோதமானது மற்றும் நெறிமுறையற்றது.

இலஞ்சம் வாங்கும் முயற்சிகளை நிராகரிக்க வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளுக்கு உண்டு. ஊழல் அல்லது நெறிமுறையற்றதாகக் கருதப்படும் எந்தவொரு நடத்தையிலும் அவர்கள் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும், மேலும் அரசாங்கத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநாட்ட வேலை செய்ய வேண்டும்.

அரசியல்வாதிகள் நேர்மையுடன் செயல்படுவதும், பொது நலனுக்குச் சேவை செய்வதற்கான அவர்களின் திறனைச் சமரசம் செய்யக்கூடிய எந்தவொரு தனிப்பட்ட பலனைப் பெறும் நடவடிக்கைகளினை தவிர்ப்பதும் முக்கியம். அவ்வாறு செய்வதன் மூலம், அவர்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையை வளர்க்கவும், ஜனநாயக செயல்முறை அனைவருக்கும் நியாயமானதாகவும் இருப்பதை உறுதி செய்ய உதவ முடியும்.

**பொது மக்கள் பொறுப்பு என்ன ?**

இலஞ்சம் என்பது நியாயம், நீதி, சமத்துவம் ஆகிய கொள்கைகளை குழிதோண்டிப் புதைக்கும் சட்ட விரோதமான, நெறிமுறையற்ற நடைமுறை என்பதால், இலஞ்சம் கொடுக்கவோ வாங்கவோ மறுக்கும் பொறுப்பு பொது மக்களுக்கு உள்ளது. இலஞ்சத்தில் ஈடுபடுவதன் மூலம், தனிநபர்கள் சட்டத்தை மீறுவது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தச் சமுதாயத்திற்கு தீங்கு விளைவிக்கும் ஊழல் கலாச்சாரத்திற்கும் பங்களிக்கிறார்கள்.

இலஞ்சம் வாங்குவதைத் தடுக்க, பொது மக்கள் தாங்கள் கண்ட ஊழல் நிகழ்வுகளை சட்ட அமுலாக்க முகவர் அல்லது ஊழல் தடுப்பு கண்காணிப்பு அமைப்புகள் போன்ற உரிய அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும். அரசாங்கம் மற்றும் வணிக நடவடிக்கைகளில் பொறுப்புக்கூறல், வெளிப்படைத் தன்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றை வலுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அவர்கள் ஆதரவளித்து வாதிட வேண்டும்.

கூடுதலாக, பொது மக்கள் சிறப்பு சலுகைகளைக் கோராதது அல்லது தனிப்பட்ட இலாபத்திற்காக விதிகளை வளைப்பது போன்ற ஊழலுக்கான வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய சூழ் நிலைகளைத் தவிர்ப்பதன் மூலம் லஞ்சத்தின் வாய்ப்பைக் குறைக்க நடவடிக்கை எடுக்கலாம். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், ஊழலை சகித்துக் கொள்ள முடியாத நேர்மையான மற்றும் நீதியான சமுதாயத்தை மேம்படுத்த பொதுமக்கள் உதவ முடியும்.

**இலஞ்சத்தை ஒழிப்பதற்கான எதிர்கால உத்திகள்.**

இலஞ்சத்தை ஒழிப்பது என்பது ஒரு சிக்கலான பிரச்சனையாகும், இதற்கு பல்வேறு துறைசார்ந்தவர்களினை உள்ளடக்கிய பன்முக அணுகுமுறை தேவைப்படுகிறது. இலஞ்சத்தை ஒழிப்பதற்கான சில சாத்தியமான எதிர்கால உத்திகள் இங்கே:

சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துதல்: இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக அரசாங்கங்கள் வலுவான சட்டங்களை இயற்றலாம் மற்றும் செயற்படுத்தலாம், குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனைகள் உட்பட. நீதி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக அவர்களது சட்ட அமைப்புகளின் செயற்றிறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும் அவர்கள் பணியாற்றலாம்.

கல்வி மற்றும் விழிப்புணர்வு:

கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் இலஞ்சத்தை ஒழிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும். குடிமக்கள், குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் உள்ளவர்கள், அவர்களின் உரிமைகள் மற்றும் இலஞ்சத்தின் ஆபத்துக்கள் மற்றும் ஊழலைப் புகாரளிப்பதன் முக்கியத்துவம் குறித்துக் கற்பிக்கப்பட வேண்டும்.

புகாரளிப்பவர்களை ஊக்குவித்தல்:

அரசாங்கங்களும் அமைப்புக்களும் ஊக்குவிப்பாளர்களை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளை உருவாக்கி, இலஞ்சம் தொடர்பான நிகழ்வுகளைப் புகாரளிக்கலாம். தவறான செயல்களைப் புகாரளிக்கும் நபர்கள் பழிவாங்கலுக்கு ஆளாக மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்த புகாரளிப்பவர்கள் பாதுகாப்புச் சட்டங்களும் வலுப்படுத்தப்படலாம்.

(மிகுதி அடுத்த வாரம் தொடரும்)




- தமிழ்க்கவி -

# வீ(நா)ட்டுக் கோழி

வீட்டுக்கு இருபத்தைந்து கோழி, ஒரு பசுமாடு, நான்கு ஆடுகள், சின்ன வீட்டுத் தோட்டம் இவை இருந்தால் ஒரு குடும்பத்துக்குத் தேவையான போசாக்கான உணவு ஒழுங்காக கிடைத்துவிடும்.

வீட்டுக்கு வீடு கோழி வளர்ப்பது எங்கள் குடியுரிமைபோல நாம் கைக் கொள்ளும் நடவடிக்கைதான். கிராமத்திவரின் வீடுகளில் கோழிகள் குடும்ப உறுப்பினர்கள்தான். அவை வீடுகளுக்குள் புகுந்து அரிசி முதல் இருக்கும் தானியங்களை தேடி கவிழ்த்து கிழறி சாப்பிடும். வீட்டுக்குள்ளேயே தனக்குப் பிடித்த இடத்தில் முட்டையிடும்.

வீட்டிலிருக்கும் பெண்களுடன் உரையாடவும் செய்யும். கோழிகளுடன் உரையாடுவது மிக சுலபமானது. எனது கோழிகளுக்கு நான் கோபமாக இருப்பது தெரியும். அவைகளுக்கு நான் உணவளிக்கும் நேரமும் தெரியும். என்னதான் வளவு முழுதும் சுற்றி மேய்ந்தாலும் மாலை ஐந்து மணிக்கெல்லாம் என் வீட்டு வாசலில் நிற்கும் செம்பருத்தி மரத்தடியில் வந்து கூட்டம் கூட்டமாக படுத்திருப்பார்கள். நான் வேறு ஏதாவது வேலையில் அதை மறந்திருந்தாலும். இந்தக் கோழிகள் வந்தால் அது ஐந்து மணிக்கு ஐந்து நிமிடம் என்பது சரியாக இருக்கும்.



வீடுகளில் முற்காலத்தில் நெல்லை உரலிலிட்டு குத்தவும், பின்னர் ஊறவைத்த அரிசியை மாவாக்கவும், உழுந்து தட்டைப்பயறு, சாமை தினை போன்ற தானியங்களை காய வைக்கவும் என வீட்டு முற்றம் உபயோகமாகும். இவை நிலத்தில் சிதறிக்கிடப்பதும் உண்டு. அவைகள் வீணாகி விடாமல் இந்த வீட்டுக் கோழிகளுக்கு உணவாகிவிடும். மீதமாகும் உணவுவகைகளும் இந்த கோழிகளுக்கும். ஆடுகளுக்கும்தான். அவை தாமாகவே வளரும். அதற்கெனக் கடைகளில் தீவனம் வாங்குவது கிடையாது.

பசுக்கள் தமக்குரிய அறுவடை முடிந்த வயல்களிலோ காடுகளிலோ மேயும். ஆடுகளும் அப்படித்தான். அவை உண்ணும் செடி புல் வகைகளில் அதிகமானவை மூலிகைகளாகும். அவற்றை உண்டு அதையே பாலாக்கி நமக்குத்தருவதால். அது உடலை அற்புதமாக பேணியது.

இந்த கோழிகள் தமது மேச்சற்றரவைகளில் பெரும்பாலும் பச்சைத் தாவரங்களையே உண்ணுகின்றன என்பது தெரியுமா? கோழிகளின் உணவில் அறுபது சதவீதம் தாவரங்கள்தான். எனவே அவைகளும் தமது உடலுக்குத் தேவையான மூலிகைகளை அவர்களாகவே தேடி உண்கிறார்கள். எனவே நாட்டுக் கோழிகளின் முட்டை, இறைச்சி என்பனவும் மிக பாதுகாப்பான உணவு.

> ‘வீடுகளில் முற்காலத்தில் நெல்லை உரலிலிட்டுக் குத்தவும், பின்னர் ஊறவைத்த அரிசியை மாவாக்கவும், உழுந்து தட்டைப்பயறு, சாமை தினை போன்ற தானியங்களைக் காய வைக்கவும் என வீட்டு முற்றம் உபயோகமாகும். இவை நிலத்தில் சிதறிக்கிடப்பதும் உண்டு. அவைகள் வீணாகி விடாமல் இந்த வீட்டுக் கோழிகளுக்கு உணவாகிவிடும்.’

நாட்டுக்கோழி எனப்படும் வீட்டுக் கோழிகள் முட்டையிட்டு அடைகாத்து குஞ்சுபொரிக்கும். அவற்றை பருந்து கீரி போன்ற எதிரிகளிடமிருந்து காப்பாற்ற படாத பாடுபடும். அவை குஞ்சுகளை பிடித்துக் கொண்டு போய்விடும். அதனால் வீடுகளில் குஞ்சுகளையும் தாயையும் மட்டும் மூடிவைத்து பாதுகாக்க குடாப்பு எனப்படும் கூடைகளை வைத்திருப்பார்கள். மற்றப்படி தமது கோழிகளை உணவுக்காகவும் வேறு தேவைகளுக்காகவும் பிடித்து அவை குறைந்து போகாமல் இப்படி போகத்துக்கு போகம் அடை வைத்து குஞ்சுகளை பெருக்கிக் கொள்வது ஒரு ஒழுங்கில் நடைபெறும்.

இந்தக்கோழிகள் என்ன இனம்,

இவற்றின் பெயர் என்ன என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. ஆனால் எல்லாவற்றுக்கும் பெயர் இருக்கும். கொண்டைக்கோழி, சிவப்பி, காப்பிலி. மொட்டைவாலன். பாணிச்சேவல், பொரிக்கோழி, சின்னட்டி, கழுத்துவெட்டி மஞ்சளத்தி என எல்லாமே காரணப் பெயராக இருக்கும். தங்களுக்கு என்ன பெயர் என்பது கோழிகளுக்கு தெரியாது. இவற்றின் குணம் என்ன என்பது பற்றிய ஐதிகக் கதைகள் கிராமத்துப் பெண்களிடம் நிறையவே உண்டு. எப்படிப்பார்த்தாலும் பொரிக் கோழிகள் கழுத்துவெட்டி இரண்டும் நிறைய முட்டையிடும் என்பார்கள். சிவப்பி குஞ்சுகளைக் காப்பாற்ற வல்லமையுள்ளது. அடைகிடந்தால் எல்லா முட்டைகளும் பொரிக்கும்

ஆனால் இப்போது இந்தக் கோழிகள் ஒவ்வொன்றும் என்ன இனத்தைச் சேர்ந்தன. என்பதை விவசாய கால்நடை உத்தியோகத்தர்கள் பிரித்து, பின்னி பெடலெடுத்து வைத்திருக்கிறதால், அவற்றுக்கு இரசாயன மருந்துகளையும் கடைத் தீனைக் கொடுக்கவும், அடிக்கடி கால்நடை வைத்திய நிலையத்துக்குப் போய் அவற்றுக்கான நோய்த் தடுப்பு மருந்துகளையும் வாங்கி கொடுத்து பழக்கப் படுத்தி பண்ணைக் கோழியுமில்லாமல் நாட்டுக் கோழியுமில்லாமல் இரண்டுங் கெட்டானாக மாற்றி வைத்திருக்கிறார்கள். இவற்றின் முட்டையில் மஞ்சட்கரு சற்று நிறம் மங்கலாக இருக்கும்.

அப்படியானால் கோழிகளுக்கு அதாவது வீட்டுக் கோழிகளுக்கு நோயே வராதா? என்று கேட்டால் வருமே. என்பதுதான் பதில். ஒரு காலத்தில் கோடை மறைந்து மழை வரும் காலத்தில் கோழிகள் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நிற்கும். இரண்டு மூன்று நாட்களில் அது செத்துப் போய்விடும். அப்படியே படிப்படியாக வீட்டிலிருக்கும் அனைத்துக் கோழிகளும் ஒன்றன்பின் ஒன்றாக இறந்து போகும். அது அந்த வீட்டோடு போகாது. கிராமத்திலுள்ள அடுத்தடுத்த வீடுகளிலிருக்கும் கோழிகளையும் கொன்று போடும். இதை கோழிக் கொள்ளை என்று என் பாட்டி சொல்வாள். இதற்கு மருந்தே கிடையாது.





இப்போது இந்த நோய் வராமல் காப்பாற்ற குஞ்சு பொரித்த ஒரு வாரம் முதல் வாராந்தம் நான்கு வாரங்களுக்கு மருந்து கொடுக்கிறார்கள். 'கம்போறா' 'ரணிகட்' என்ற நோய்களுக்கான தடுப்பு என இது அமையும். கோழிக்குஞ்சுகளுக்கு ஒரு மாதத்தில் வரும் "கொரைசா" என்ற ஒரு நோய் இறக்குமதி குஞ்சுகளிடமிருந்து தான் வந்ததாக கூறுகிறார்கள். அனால் நான் எனது சின்ன வயதில் இப்படி நோய் வந்த வீட்டுக் கோழியை கண்டிருக்கிறேன். என்தாய் அதற்கு என்ன வைத்தியம் செய்தாள் என்பதை மிக கஸ்டப்பட்டு



யோசித்துக் கண்டுபிடித்தேன். அதற்குள் எனது பெருமளவு குஞ்சுகள் இறந்து போயின. கால்நடை வைத்தியரே கைவிட்டபின், நான் எனது வீட்டு வைத்தியத்தை ஆரம்பித்தேன். வெற்றி வெற்றி கோழிகள் தப்பிவிட்டன. ஒன்றும் பிரமாதமில்லை கண்ணின் புரையை அமுக்கி அந்த வெள்ளைப்படையை நீக்கிவிட்டு கல்லுப்பு தேசிக்காய், இரண்டையும் கரைத்துப்பூசினேன். புதினாவையும் இஞ்சியையும் அரைத்து சிறிதளவு காலை மாலை பருக்கினேன். கோழிகள் வளர்ந்து முட்டையிட்டு பேரன் பேத்திகளையும் கண்டன.

சாதாரணமாக சளித்தொல்லை வரும்போது மருந்து தேடாமல், வருமுன்னாகவே அதற்கான குடிநீரை தயாரித்து பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை கொடுக்கலாம். புதினா இஞ்சி, பூடு, சீரகம், முருங்கையிலை, குப்பைமேனி, கீழாநெல்லி இவற்றைச் சம அளவில் எடுத்து அரைத்து நீரிலிட்டு கொதிக்க வைத்து குடிநீரில் ஒரு லீட்டருக்கு இருபது மில்லி லீட்டர் கலந்து வைத்தால் கோழிகள் ஆரோக்கியமாக இருக்கும். பெரும்பாலும் சளி முற்றிவிட்டால் வெள்ளைக்களிச்சல் ஏற்படும். அதன்பின் அவற்றை காப்பாற்ற முயல்வதைவிட அவற்றைத் தனிமைப் படுத்துவதே சிறந்த வழி.

நாட்டுக்கோழிகள் இரவில் அடைவதற்கு மட்டுமே கூடு. அதற்காக சிறிய காற்றோட்டமில்லாத கூடுகள் சரியல்ல. கடும் வெப்ப காலத்தில் மரங்களின் கீழ் நீர் பாய்ச்சி ஈரமாக வைத்திருந்தால் அவை அதன்கீழ் ஓய்வெடுக்கும். பலர் அந்த மரங்களையே கோழிகள் அடைவதற்கான இடமாக விடுவதை கண்டிருக்கிறேன். வன விலங்குகளான நரி, காட்டுப் பூனை போன்ற விலங்குகள் கோழிகளைப் பிடித்து விடும். அவை இரவில் கூட்டுக்குள் அடைத்து நிற்பதே பாதுகாப்பு.

சிறிதளவு சருகுகளை சேர்த்துக் கறையான் பெருக்குதல், சாணம், அழுகிய பழங்கள் கழிவு உணவுகளைச் சேர்த்து புழு வளர்த்தல், அசோலா தொட்டிகளை செய்தல் என்பவைமட்டும் எனது கோழிகளுக்கு போதுமானதாக உள்ளது. வீட்டுக்கு அளவாக வளர்த்தால் செலவில்லை. எனக்கும் சிறிதளவு அயலவர்களுக்கும் கொடுக்க முடிகிறது.

நாட்டுக்கோழிகளை வளர்ப்பதால் வீட்டுத் தோட்டம் பாதிக்காமல், திருநெலவேலி விவசாய நிலையம் வழங்கும் பாதுகாப்பு வலைகளை பெற்று, தோட்டத்தை சுற்றி அடைத்து விட்டால் வெற்றிகரமான வாழ்க்கை ஆரோக்கியமான உணவு. முதலில் வீட்டுக்கு இருபது நாட்டுக்கோழிகளை வளர்ப்போம். அதன்பின் முடிந்தால் அதிகப்படுத்தலாம்.

# விவசாயத்துறை வளர்ச்சியில் ஊடகங்களின் பங்கு என்ன?



“உணவுப் பாதுகாப்பு, நிலையான விவசாய நடைமுறைகள் மற்றும் விவசாயிகள் எதிர் கொள்ளும் சவால்கள் போன்ற விவசாயம் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி மக்களுக்குத் தெரிவிப்பதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பல நாடுகளில், ஊடகங்கள் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்து, அவர்களின் போராட்டங் களை முன்னிலைப்படுத்தி, அவர்களின் உரிமைகளுக்காக வாதிடுகின்றன”

பத்திரிகைச் சுதந்திரத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஊடகங்களின் சுதந்திரத்தின் மீதான தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கவும் ஒவ்வொரு ஆண்டும் மே 3 ஆம் திகதி உலகப் பத்திரிகை சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் 1993 இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் நிறுவப்பட்டது மற்றும் பத்திரிகைச் சுதந்திரத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டாடுவதற்கும், கடமையின் போது உயிரிழந்த ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கும் ஒரு சந்தர்ப்பமாக செயல்படுகிறது.

2023 ஆம் ஆண்டின் உலக பத்திரிகை சுதந்திர தினத்தின் கருப்பொருள் “உரிமைகளின் எதிர்காலத்தை வடிவமைத்தல் மற்ற அனைத்து மனித உரிமைகளுக்கும் ஒரு இயக்கியாக கருத்துச் சுதந்திரம் செயல்படல்” மற்ற அனைத்து மனித உரிமைகளையும் அனுபவிக்கவும் பாதுகாக்கவும் கருத்துச் சுதந்திரத்தின் செயல்படுத்தும் கூறுகளை பற்றிக் குறிக்கிறது. உலக பத்திரிகைச் சுதந்திரத் தினத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

உலகப் பத்திரிகைச் சுதந்திர தினம், அரசாங்கங்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகம் ஒன்று கூடி பத்திரிகை சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் ஊடகங்களின் பங்கு தொடர்பான பிரச்சினைகளை விவாதிக்க ஒரு வாய்ப்பை வழங்குகிறது. பத்திரிகை சுதந்திரம் என்பது ஒரு அடிப்படை மனித உரிமை என்பதையும், சுதந்திரமான மற்றும் திறந்த சமூகங்களின் வளர்ச்சிக்கு அவசியமானது என்பதையும் இது நினைவூட்டுகிறது.

## உலக விவசாயத்துறை

உலகப் பத்திரிக்கை சுதந்திர தினத்தின் கவனம் கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் சுதந்திரத்தை ஊக்குவிப்பதில் ஊடகங்களின் பங்கை முதன்மையாகக் கொண்டிருந்தாலும், பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் விவசாயத்திற்கும் இடையே தொடர்பு உள்ளது.

உணவுப் பாதுகாப்பு, நிலையான விவசாய நடைமுறைகள் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் போன்ற விவசாயம் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி மக்களுக்குத் தெரிவிப்பதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பல நாடு களில், ஊடகங்கள் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்து, அவர்களின் போராட்டங்களை முன்னிலைப்படுத்தி, அவர்களின் உரிமைகளுக்காக வாதிடுகின்றன.

இருப்பினும், சில நாடுகளில், பத்திரிகை சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது, மேலும் விவசாய பிரச்சினைகளை ஊடகங்கள் சுதந்திரமாக தெரிவிக்க முடியாது. இது விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும், ஏனெனில் அவர்களின் குரல்கள் மற்றும் கவலைகள் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பரந்த பொதுமக்களால் கேட்கப்படாது.

மேலும், நிலையான விவசாய நடைமுறைகளை மேம்படுத்துவதிலும், பருவநிலை மாற்றம் மற்றும் பல்லுயிர் இழப்பு போன்ற விவசாயம் தொடர்பான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் ஊடகங்கள் பங்கு வகிக்கின்றன.

பத்திரிகை சுதந்திரம் தடைசெய்யப்பட்ட பல நாடுகளில் உள்ளன, மேலும் விவசாய பிரச்சினைகளை சுதந்திரமாக அறிக்கை செய்வதில் பத்திரிகையாளர்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர். இதோ சில உதாரணங்கள்:

சீனா: சீன அரசாங்கம் ஊடகங்கள் மீது கடுமையான கட்டுப்பாட்டைப் பேணுகிறது. மற்றும் அரசாங்கத்தை விமர்சிக்கும் அல்லது அதன் கொள்கைகளை சவால் செய்யும் தகவல்களை தணிக்கை செய்கிறது.

எகிப்து: விவசாயம் தொடர்பான

பிரச்னைகள் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் குறித்து செய்தி வெளியிடும் பத்திரிகையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்த வரலாறு எகிப்து அரசுக்கு உண்டு. சமீப ஆண்டுகளில், விவசாயப் பிரச்சினைகள் குறித்து செய்தி வெளியிட்டதற்காக பல பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் அல்லது துன்புறுத்தப்பட்டுள்ளனர்.

துருக்கி: துருக்கியில் விவசாயம் உள்ளிட்ட முக்கியப் பிரச்சினைகளைப் பற்றிப் புகாரளிக்கும் ஊடகவியலாளர்கள் கைது, தடுப்புக்காவல் மற்றும் வழக்குத் தொடரப்படும் அபாயம் உள்ளது. விமர்சனக் குரல்களை அடக்க அரசாங்கம் ஊடக தணிக்கை மற்றும் துன்புறுத்தலையும் பயன்படுத்தியுள்ளது.

ரஷ்யா: ரஷ்ய அரசாங்கம் பத்திரிகை சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாகவும், அரசாங்கத்தை அல்லது அதன் கொள்கைகளை விமர்சிக்கும் தகவல்களை தணிக்கை செய்வதாகவும் அறியப்படுகிறது.

வெனிசுலா: விவசாயப் பிரச்சனைகள் குறித்து செய்தி வெளியிடும் ஊடகவியலாளர்கள் அரசாங்க அதிகாரிகளின் துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர்.

### இலங்கையின் விவசாயத்துறை

விவசாயத்தை மையமாகக் கொண்ட பல பத்திரிகை வெளியீடுகள் இலங்கையில் உள்ளன. டெய்லி நியூஸ் விவசாயப் பிரிவு, வூந ஜஊடயனெ போன்ற ஆங்கில நாளிதழ்களும் லங்காதீப Ada Derana, Dinamina போன்ற தினசரி சிங்கள மொழிப் பத்திரிகைகளும் விவசாய நுட்பங்கள், பயிர் உற்பத்தி, நீர்ப்பாசனம் மற்றும் பூச்சி மேலாண்மை, கால்நடை மேலாண்மை மற்றும் விவசாயக் கொள்கைகள், பயிர் மேலாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாடு போன்ற தலைப்புகளை உள்ளடக்கிய விவசாயச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

தினகரன், வீரகேசரி, உதயன் போன்ற தமிழ் பத்திரக்கைகளும் காலத்துக்கு காலம் விவசாயத்துறை சார்ந்த செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

### விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

உணவுப் பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் கிராமப்புற மேம்பாடு தொடர்பான பிரச்சினைகள் உட்பட விவசாயத் துறை எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பத்திரிகை சுதந்திரம் உதவும். இந்தச் சிக்கல்களைப் பற்றிப் புகாரளிப்பதன் மூலம், ஊடகவியலாளர்கள் பொதுமக்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் கல்வி கற்பதற்கும், இந்தச் சவால்களை எதிர்கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய அவசர உணர்வை உருவாக்குவதற்கும் உதவுகின்றன.



அதிகாரத்தை பொறுப்பேற்க வைத்தல்: விவசாயத் துறையில் ஊழல், தவறான நிர்வாகம் மற்றும் பிற பிரச்சினைகளைப் பற்றி அறிக்கை செய்வதன் மூலம், அதிகாரத்தில் உள்ளவர்களை பொறுப்புக்கூற வைக்க பத்திரிகையாளர்கள் உதவுகின்றனர். மற்றும் துறையை மேம்படுத்தக்கூடிய சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் கொடுத்தல். நில அபகரிப்பு, தொழிலாளர் உரிமை மீறல்கள் மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடு போன்ற பிரச்சனைகள் பற்றிய புகாரளிப்பது இதில் அடங்கும்.

உரையாடலை எளிதாக்குதல்: வேளாண்மைத் துறை எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகளைப் பற்றிய உரையாடல் மற்றும் விவாதத்தை எளிதாக்குவதற்கு ஊடகங்கள் உதவுகின்றன, மாற்றத்திற்கான சாத்தியமான தீர்வுகள் மற்றும் உத்திகளை ஆராய பல்வேறு குரல்கள் மற்றும் முன்னோக்குகளை ஒன்றிணைக்கின்றன.

தகவலுக்கான அணுகலை வழங்குதல்: விவசாயிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் விவசாயத் துறையைப் பற்றிய தகவலறிந்த முடிவுகளை எடுக்கத் தேவையான தகவல்களை அணுகுவதை உறுதிப்படுத்தவும் பத்திரிகைச் சுதந்திரம் உதவும். இதில் புதிய தொழில்நுட்பங்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் சந்தைப் போக்குகள் போன்றவற்றை உள்ளடங்கும்

இலங்கையின் விவசாயத்துறையில் இலங்கையின் பத்திரிகை துறை இன்னமும் கூட அழுத்தமாக பல விடயங்களைப் பதிவு செய்ய வேண்டிய தேவை உள்ளது. இவை நிவர்த்தி செய்யப்படாமல் இலங்கையின் விவசாயத்துறையின் வளர்ச்சி கேள்விக்குரியதாகவே காணப்படும் இலங்கையின் விவசாயத்துறையின் வளர்ச்சியை பாதிக்கும் இலங்கையின் பத்திரிக்கை துறையினால் அழுத்தமாக பதிவு செய்ய வேண்டிய விடயங்கள்

1. அரசு கொள்முதல் செயல்முறைகளில் லஞ்சம்.

2. விவசாய வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை தவறாகப் பயன்படுத்துதல்.

3. நில அபகரிப்பு மற்றும் சட்டவிரோத நில பயன்பாட்டு நடைமுறைகள்.

4. சட்டவிரோத வர்த்தகம் மற்றும் விவசாய பொருட்களைக் கடத்தல்.

5. விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள அரசு அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகளால் கப்பம் வாங்குதல் மற்றும் லஞ்சம் வாங்குதல்.

6. விவசாய மானியங்கள் மற்றும் உதவித் திட்டங்களை தவறாகப் பயன்படுத்துதல்

7. கட்டாய உழைப்பு மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் உட்பட விவசாயத் துறையில் தொழிலாளர் சுரண்டல்.

8. சட்டவிரோத விவசாய முறைகளால் சுற்றுச்சூழல் சீர்கேடு மற்றும் இயற்கை வளங்களின் அழிவு.

9. பூச்சிக்கொல்லிகள் மற்றும் பிற இரசாயனங்களின் தவறான பயன்பாடு.

10. விவசாயத் துறை நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாமை.

11. இத்துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாததால், ஊழலின் அனைத்து நிகழ்வுகளையும் முழுமையாக வெளிக்கொணர்வதும், நிவர்த்தி செய்வதும் கடினமாகிறது.

12. தனிப்பட்ட நலன்களை ஆதரிக்க தரவு மற்றும் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை கையாளுதல்.

13. விவசாய அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் அதிகார துஷ்பிரயோகம், லஞ்சம் மற்றும் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை மிரட்டுதல்.

14. விவசாய நோக்கங்களுக்காக சட்டவிரோத மரங்களை வெட்டுதல் மற்றும் காடழித்தல்.

15. விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை திருடுதல் மற்றும் தவறாகப் பயன்படுத்துதல்.

https://agricultureinformation.lk



வி.ராமகிருஷ்ணன்

# பிடித்த வேலையைச் செய்ய தேவையான ‘நிதி சுதந்திரம்’

ஐம்பத்தைந்து அல்லது அறுபது வயதில் ஓய்வு பெற்று, மனதுக்குப் பிடித்த வேலையைச் செய்ய வேண்டும் என்கிற ஆசை பலருக்கும் இருக்கிறது. ஆனால், அந்த ஆசை பலருக்கும் நிறைவேறுவதில்லை. காரணம், அந்த வயதில் அவர்களால் நிதிச் சுதந்திரம் அடைய முடிவதில்லை.

அதனால், பிடித்த வேலையோ, பிடிக்காத வேலையோ தொடர்ந்தும் மாடாக உழைக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இந்த நிலை மாறவேண்டுமானால், நீங்கள் இளம் வயதில் தொழில் தொடங்கும் போதே திட்டமிட்டு நிதிச் சுதந்திரத்தை உருவாக்க முனைய வேண்டும். உங்கள் மாத வருமானம் எவ்வளவாக இருந்தாலும், அதற்குள் எவ்வாறு சேமிக்க முடியும் என்பதைக் கண்டறிந்துகொள்ள வேண்டும்.

நிதி சுதந்திரம் (Financial Freedom) என்றால் என்ன, அதற்கு என்ன செய்ய வேண்டும்?

### கடன்கள் தொல்லை

ஒருவர் நிதி சுதந்திரம் அடையாமல் போவதற்கு முக்கியமான தடையாக இருப்பது கடன்களாகும். கடன்களை சமாளிக்கும் வழிகள்தான் என்ன?

ஒருவர் தனக்குள்ள அனைத்துக் கடன்

> *“செலவுகள் போகச் சேமிக்கும் பழக்கத்தைக் கைவிட்டுவிட்டு, சேமிப்புப் போகச் செலவு செய்யும் பழக்கத்தை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். சம்பளத்தில் குறைந்தபட்சம் 30% சேமிக்க முயற்சி செய்தீர்களானால், நீங்கள் ஓய்வு காலத்தில் உங்களுக்கு பிடித்தமான வேலையைச் செய்துகொண்டு நிம்மதியாக இருக்க முடியும்...”*

முதலில் பட்டியலிட வேண்டும். இந்தக் கடன்களை இரு விதமாக அடைக்கலாம். அதிக வட்டியிலான கடன் களை முதலில் அடைப்பது ஒருமுறையாகும். ஒருவருக்கு கடன் அட்டை (ஆண்டு வட்டி 36% - 45%), தனிநபர் கடன் (15% - 22%), தங்க நகை அடமானக் கடன் (20 - 25%) ஆகிய கடன்கள் இருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம்.

கடன் அட்டை கடனை முதலில் அடைப்பதன் மூலம் வட்டிக்குச் செல்லும் தொகை கணிசமாகக் குறையும். இதற்கு அடுத்து, தனிநபர் கடன், கடைசியாகத் தங்க அடமானக் கடனை அடைக்க வேண்டும்.

ஒருவேளை, நம்மிடம் போதுமான பணமில்லாத பட்சத்தில் குறைந்த மதிப்புள்ள கடன்களை முதலில் அடைக்க வேண்டும். ஒருவருக்கு 2 லட்சம் ரூபா கடன் அட்டை கடன், 50,000 ரூபா தங்க நகை கடன், 1 லட்சம் ரூபா தனிநபர் கடன் இருந்தால், முதலில் குறைவான தொகையைக் கொண்ட தங்க நகைக் கடன், அடுத்து தனிநபர் கடனை அடைத்து விட்டு, இறுதியாகக் கடன் அட்டை கடனை அடைக்க வேண்டும்.

இப்படிச் செய்யும் போது பாக்கியிருக்கும் கடன்களின் எண்ணிக்கை வேகமாகக் குறையும். அப்போது ஓர் உத்வேகம் ஏற்பட்டு மற்ற கடன்களையும் விரைவில் அடைக்க வேண்டும் என்கிற நம்பிக்கை அதிகரிக்கும்.

### குடும்பப் பட்ஜெட்

உங்கள் பணம் எங்கே செல்கிறது என்பதை மிகச் சரியாகத் தெரிந்துகொள்ள குடும்ப பட்ஜெட் போட்டு செலவு செய்வது தவிர, வேறு வழியில்லை. பட்ஜெட் போட்டு செலவு செய்யும் போது தேவை இல்லாத




செலவுகள் தனியாகத் தெரியும். அந்தச் செலவுகளைத் தவிர்த்துவிட்டாலே ஒருவர் வேகமாக செல்வந்தராகி நிதி சுதந்திரம் அடைந்து விட முடியும்.

கண்டபடி செலவு செய்தல், கணக்குப் பார்க்காமல் செலவு செய்தல் உள்ளிட்ட மோசமான பணப் பழக்கங்களைக் கண்டறிந்து அவற்றைக் கைவிட வேண்டும். முக்கியமாக, செலவுகள் போக சேமிக்கும் பழக்கத்தைக் கைவிட்டுவிட்டு, சேமிப்பு போக செலவு செய்யும் பழக்கத்தை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். சம்பளத்தில் குறைந்தபட்சம் 30% சேமிக்க முயற்சி செய்யவும். அடுத்து, சம்பளம் அதிகரிக்க அதிகரிக்க செலவை அதிகரிக்காமல், சேமிப்பை அதிகரிக்கப் பழகுங்கள். இப்படிச் செய்யும்போது நிறைய பணம் மிச்சமாகி, எதிர்காலத் தேவைக்கு சேமிக்கவும், முதலீடு செய்யவும் பயன்படும்.

### சிக்கனம் முக்கியம்

சிக்கனமாகச் செலவு செய்து, எங்கேயெல்லாம் பணத்தைச் சேமிக்கலாம் என்று பாருங்கள். பட்ஜெட் போட்டு செலவு செய்யும்போது, அதற்குள் செலவுகளை அடக்க முயற்சி செய்யுங்கள். காரணம், செலவு செய்வதால், ஒருவர் நிதி சுதந்திரம் அடைவது தள்ளிப்போகும். ஆனால், சம்பளத்தில் குறிப்பிட்ட அளவு தொகையை முதலீடு செய்வதால், எதிர்கால இலக்குகளை அடைந்து, நிதி சுதந்திரத்தை நிச்சயம் அடைய முடியும். இன்றைக்கு நிதி சுதந்திரத்தை அடைந்தவர்கள் அனைவருமே அதிகம் செலவு செய்தவர்கள் அல்லர் அதிகம் சேமித்தவர்கள்தான்.

நிதி சுதந்திரம் அடைய வேண்டும் எனில், ஒருவர் கட்டாயம் அவசரகால நிதியைச் சேர்ப்பது அவசியம். அப்போதுதான் ஏதாவது திடீர் செலவு ஏற்பட்டால், நிலைமையை சுலபமாகச் சமாளிக்க முடியும். குடும்பத்தின் மாதச் செலவைப்போல குறைந்தது 6 - 9 மடங்கு தொகையை அவசரகால நிதியாக வைத்துக்கொள்ள வேண்டும். இதனால் கடன் வாங்க வேண்டிய அவசியம் இருக்காது.

நிதி சுதந்திரம் அடைய வேண்டும் எனில், செய்யும் முதலீடுகள் இலாபகரமாக இருக்க வேண்டும். அதற்குப் பணவீக்க விகிதத்தைவிட அதிகமாக வருமானம் தரும் மற்றும் குறைவான வருமான வரி கட்டும் திட்டங்களில் முதலீடு செய்வது அவசியம். நிலையான வைப்பு இதற்குப் பெருமளவுக்கு உதவும். தங்க நகைகளில் முதலீடு செய்வதும் அதிக இலாபம் தரக் கூடிய ஒன்றுதான்.

ஒருவர் நிதி சுதந்திரம் அடைய வேண்டும் எனில், அவரின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மேலே கண்ட நல்ல நிதிப் பழக்கங்களைக் கற்றுத் தருவது அவசியம். அவர்களும் நிதி சார்ந்த நல்ல பழக்கங்களைக் கொண்டிருந்தால் மட்டுமே நீங்கள் நிதி சுதந்திரம் அடைய முடியும்!

வாழ் முற்றம்
05-02-2023 முதல் புதிய இடத்தில்
551, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு எதிரில்
உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தை
பனைசார் உற்பத்திப் பொருட்கள் தும்பு உற்பத்திப் பொருட்கள்
இயற்கை விவசாய மரக்கறிகள் இயற்கை விவசாய இடுபொருட்கள்
வீட்டுத்தோட்ட மரக்கன்றுகள் இயற்கை உரங்கள்
கைவினைப் பொருட்கள் மட்பாண்டம் பாதணிகள்
உலர் உணவுப் பொருட்கள் கடல் உணவுப் பொருட்கள்
இரசாயனமற்ற ஆரோக்கிய பானங்கள்
ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள் சித்திரங்கள்
பயிற்சி வகுப்புகள் (யோகா, பரதம், கராட்டி, சமையல்....)
076 443 8620
உள்ளூர் உற்பத்தி – கலாசாரம் – பாரம்பரியம்

# இலாபம் தரும் நிலக் கடலைச் செய்கை இயற்கை முறையில் செய்வது எப்படி?



ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை

நிலக்கடலை ஒரு வெப்ப மண்டல பயிர் என்பதோடு 99 வீதம் மேட்டு நிலத்தில் மட்டும் பயிரிடப் படுகின்ற பயிராகும்.

பள்ளக்காணிகளில் பயிரிடப் படுவது மிக மிகக் குறைவு.

நிலக்கடலை ஆனது ஆசிய நாடுகளில் குறிப்பாக தென்னிந்தியா, இலங்கையிலும் அதிக அளவில் பரவலாக உற்பத்தி செய்யப் படுகின்றது.

பரவலாக உற்பத்தி செய்யப்பட்டாலும் எமது நாட்டைப் பொறுத்த வரை தன்னிறைவடையவில்லை என்பது உண்மை.

நிலக்கடலை. பயிர் இடுவதற்கு மணல் சார்ந்த இருவாட்டி மண், மக்கிய மண், சொரு சொருப்பான செம்மண் போன்றவை ஏற்றன.

மாறாக களிமண், கற்கள் அதிகம் உள்ள நிலம் மற்றும் இறுக்கமான நிலப்பகுதிகளில் நடக்கூடாது. காரணம் விளைச்சல் முற்றிலும் குறைவாக இருக்கும். தேர்வு செய்த நிலத்தில் 10 டன் தொழுஉரம் இட்டு உழவு செய்ய வேண்டும். ஆனால் நடுவதற்கு இரண்டு மாதம் முன்பே வயலில் இட்டு உழுது விட வேண்டும் .



அல்லது சணப்பை ஏக்கருக்கு இருபது கிலோ விதைத்து நன்கு வளர்ந்து பூ அல்லது பிஞ்சுகள் தோன்றும் சமயத்தில் மடக்கி நன்றாக உழவு செய்து பின் இரண்டு மாதம் கழித்து நிலக்கடலை நடுகை செய்யலாம்.

ஏக்கருக்கு கிட்டத்தட்ட 40 முதல் ஐம்பது கிலோ விதை போதுமானது. ஏர் அல்லது டிராக்டர் மூலம் விதைக்கலாம். கண்டிப்பாக போதுமான ஈரப்பதம் வேண்டும். கோது உடைத்த விதைகளாக இருந்தால் நட்டு மூன்றாம் நாளில் முளைத்து விடும்.

உடைக்காமல் முழு விதைகளாக நடுவதாக இருந்தால் நட்டு ஐந்தாவது நாள் முளைக்கும். நடும் பொழுது வரிசைக்கு வரிசை 45 செமி இடைவெழியும். செடிக்கு செடி 15 செமி இடைவெளியும் இருக்க வேண்டும். 15 சென்டிமீட்டர் இடைவெளியில் நடுவதாக இருந்தால் ஒரு விதை வீதமும். 20 சென்டிமீட்டர் இடைவெளியில் நடுவதாக இருந்தால் இரண்டு விதைகள் வீதமும் நடுகை செய்யலாம். அதாவது ஒரு சதுர மீட்டரில் 18 செடிகள் போதுமானவை.

விதைநேர்த்தி செய்யும் போது நன்கு முற்றிய, சுருக்கம் இல்லாத விதைகளை தேர்வு செய்ய வேண்டும். அதோடு கட்டாயம் நடுகை செய்யத் தேவையான விதைகளில் 50 கிலோ விதைகடலைக்கு மூன்று கிலோ கிளிஞ்சல் சுண்ணாம்புத் தூள், இரண்டு கிலோ சாம்பல் கலந்து நடுகை செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதனால் வேர் சம்பந்தப்பட்ட நோய்கள் தாக்காமல் தடுக்கலாம்.

சில இடங்களில் எலிகள் மற்றும் முயல், மயில், போன்றவற்றின் தொல்லை அதிகமாக இருக்கும் பட்சத்தில். விதைகள் முளைத்த நாளிலிருந்து ஏழாம் நாள் நன்கு பழுதான அதாவது அழுகிய இரண்டு முட்டைகளை எடுத்து 10 லிட்டர் நீரில் நன்றாகக் கலந்து. செடிகள் நன்றாக நனையும் அளவிற்கு. மருந்து அடிக்கும் கருவியின் ஊடாக தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் நடப்பட்ட விதைகளை உண்ணும் நோக்கில் எந்த ஒரு பிராணிகளும் அவ்விடத்திற்கு வராது. ஒவ்வொரு வாரமும் இந்தக் கலவையினை உற்பத்தி செய்து பயன்படுத்தலாம். ஆனால் செடிகள் பூக்க ஆரம்பித்தால் இந்தக் கலவையை தெளிப்பதை நிறுத்திவிட வேண்டும்.

அதோடு அழுகிய முட்டையின் நாற்றத்தால் அவ்விடத்திற்கு பன்றிகள் வர வாய்ப்புள்ளது.

முளைத்ததில் இருந்து. 20, 25 ஆம் நாள் முதல் பூக்கள் தோன்ற ஆரம்பிக்கும். விதைகள் முளைத்த நாளிலிருந்து பொதுவாக

> “நிலக்கடலைப் பயிருக்கு அதன் வாழ்நாளில் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு தடவை வீதம் தண்ணீர்பாய்ச்சினால் போதுமானது. முற்றிலும் இயற்கை முறையில் நடுகை செய்யும்போது வாரத்தில் ஒருமுறை நீர் பாய்ச்சினால் போதுமானது.”

இரண்டு தடவை களைஎடுக்க வேண்டும். அதாவது முளைத்து பதினைந்தாவது நாளில் ஒரு தடவையும். மற்றும் நாற்பதாவது நாளில் இரண்டாவது தடவையும்





களை எடுக்க வேண்டும். இதில் இரண்டாவது களை எடுக்கும்போது கட்டாயம் மண் அணைக்க வேண்டும்.

இதுவே பெரிய இடைவெளியில் விதைகள் நடப்பட்டிருந்தால் இரண்டாவது களையெடுப்பின் பின் மண்ணணைப்பின் போது கிளைகளை மடக்கி அதன் மேல் மன்னனைத்து வந்தால் இன்னும் அதிகமான விளைச்சலை பெறக்கூடியவாறு இருக்கும். இந்த மாதிரியான விவசாய முறைகளை ஒரு சில பண்ணையாளர்கள் மட்டுமே கடைப்பிடிக்கின்றார்கள். இவ்வாறு செய்வதனால் அதிக விளைச்சல் கொடுக்கும் என்பதில் மாற்று கருத்து இல்லை.

நிலக்கடலை பயிருக்கு அதன் வாழ்நாளில் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு தடவை வீதம் தண்ணீர்பாய்ச்சினால் போதுமானது. முற்றிலும் இயற்கை முறையில் நடுகை செய்யும்போது வாரத்தில் ஒருமுறை நீர் பாய்ச்சினால் போதுமானது. இதுவே பள்ளக்காணியாக இருந்தால் மண்ணின் ஈரப்பதத்தை அறிந்து நீர் பாய்ச்ச வேண்டும் மாறாக மண்ணில் ஈரப்பதன் அதிகமாக இருந்தால் வேர் அழுகல் போன்ற நோய்கள் கட்டாயம் ஏற்படும்.

மேம்படுத்தப்பட அமிர்த கரைசல் அல்லது மீன் அமிலம் போன்ற இயற்கை பயிர் வளர்ப்பு ஊக்கிகளை வாரத்திற்கு ஒரு தடவை தொடர்ந்து கொடுப்பதன் மூலம் அதிகளவான விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியும் அத்தோடு திரட்சியான கடலைகளை பெறலாம் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை. செடிகள் நன்றாக வளர்ந்தால்தான் கிழங்குகளும் நன்றாக வளரும் என்பதை விவசாயிகள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

முதல் களை எடுத்த பின் தண்ணீர் பாய்ச்சிய மறுநாள் கட்டாயம் பயிர் வளர்ப்பு ஊக்கியான ஜீவாமிர்தம் அல்லது ரசாயன உரம் இடவேண்டும்.

முடிந்தவரை இயற்கையான முறையில் உற்பத்தி செய்வதே எமக்கும். எமது அடுத்த தலைமுறையினருக்கும் சிறந்ததாக இருக்கும்.

அத்தோடு இரசாயன உரம் அதிக செலவினத்தை ஏற்படுத்தும்.

100 முதல் 105 நாட்களில் அறுவடை செய்யப்படும் நிலக்கடலைகளை மட்டுமே விதைக்குரிய நிலக்கடலைகளை பயன்படுத்தலாம். ஒரு சில விவசாயிகள் 90 ஆவது நாளிலே அறுவடை செய்ய ஆரம்பித்து விடுவார்கள். ஆனால் இவற்றை விதைகளுக்கு பயன்படுத்த இயலாது காரணம் இவற்றைக் காயவைத்து எடுக்கும் போது நிலக்கடலை விதைகளில் சுருக்கம் ஏற்பட்டு முளைத்திறன் குறைந்து விடும்.

எதிர்காலத்தில் எமக்குப் போதுமான



விளைச்சலையும் கொடுக்காது.

இந்த விடயத்தில் விவசாயிகள் மிச்சம் கவனமாக இருக்க வேண்டும்.

அத்தோடு குறிப்பிட்ட ஒரு நிலத்தில் தொடர்ச்சியாக ஒன்று அல்லது இரண்டு தடவைகளுக்கு மேல் நிலக்கடலை பயிரிடக் கூடாது. மாறாக மூன்றாவது தடவை நிலக்கடலை பயிரிட்டால் அதன் விளைச்சல் முதலாவது மற்றும் இரண்டாவது தடவையில் கிடைத்த விளைச்சலை விட குறைவாக இருக்கும். இதனை ஒரிரு விவசாயிகள் நிச்சயம் அறிந்திருப்பார்கள்.

இப்ப பிரச்சினையினை நாங்கள் இரண்டு முறைகளில் நிவர்த்தி செய்ய



லாம்.

1. மூன்றாவது தடவையும் நிலக்கடலை பயிரிட நினைத்தால் இரண்டாவது அறுவடை முடிந்த பிற்பாடு அந்த நிலத்தில் வழமையை விட மேலதிகமான உரக் கட்டமைப்பை ஏற்படுத்திய பின்பு பயிரிட வேண்டும்.

2. இரண்டாவது அறுவடை முடிந்த பின்பு அந்த நிலத்தில் நைட்ரஜனை கொடுக்கக்கூடிய தானியங்களான. உதாரணமாக கௌப்பி, பயறு, பயிற்றை சனப்பு போன்ற பயிர்களை நடவு செய்த பிற்பாடு நிலக்கடலை நடுகை செய்யலாம்.

### ஏக்கருக்கு காய்ந்த நிலக்கடலை.

40 கிலோ மூட்டை. குறைந்து 30 மூட்டைகள் விளைச்சல் வரவேண்டும்.

அப்போது தான் முழுமையான விளைச்சல் என்று அர்த்தம். ஒவ்வொரு செடியிலும் 20 க்கும் அதிகமான நிலக்கடலைகள் இருந்தால் அது சிறந்த விளைச்சலாக கருதப்படும். அத்தோடு சந்தைப்படுத்தும் போது நிலக்கடலையினை பச்சையாக கொடுப்பதை விடக் காயவைத்து கொடுப்பது. இலாபமாக இருக்கும்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

**Ph: 0770239784**
**WhatsApp: 0769196445**



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

# கோழிப்பண்ணைகளில் உயிர்ப் பாதுகாப்புமுறைகளும் நோய்த்தடுப்பும் ஏன் அவசியம்?

சில மாதங்களுக்கு முன் என்னிடம் ஒரு கோழிப்பண்ணையாளர் வந்திருந்தார். நன்றாக இருந்த தனது கோழிகள் திடீரென தூங்கித் தூங்கி இறப்பதாக சொன்னார். ஓரளவு வளர்ந்த கோழிகள். ரனிக்கட் எனும் வெள்ளைக் கழிச்சல் கொள்ளை நோய்க்கு அவை உள்ளாகியிருந்தன. ஏறக்குறைய அவரின் எல்லாக் கோழிகளும் பாதிக்கப்பட்டு இறந்து கொண்டிருந்தன. கோழி வாங்கும் பண்ணைக் கடைகள் கோழி வளர்பாளர்கள் என கதைத்து பல மருந்துகளை கொடுத்து சரி வராததால்தான் என்னிடம் வந்திருந்தார்.

அவரின் பண்ணை தொடர்பாகவும் அண்மைய காலத்தில் பண்ணையில் செய்த புதிய மாற்றங்கள் தொடர்பாகவும் விசாரித்த போது, சில நாட்களுக்கு முன் வீதியில் விற்பனையாகிய சேவல் ஒன்றை வாங்கி ஏற்கனவே உள்ள கோழிகளுடன் கலந்து விட்டிருக்கிறார். அந்த சேவல்தான் முதலில் தூங்கித்தூங்கி இருந்து இறந்து போயிருக்கிறது. பிறகு ஏற்கனவே இருக்கும் அவர்களது கோழிகளும் தூங்கித்தூங்கி இறக்கத் தொடங்கியிருந்தன. நாங்கள் சிகிச்சை செய்து காப்பாற்ற முடியாத நிலை.

அத்துடன் அவருடைய கோழிகளுக்கு தடுப்பூசி போட்டதே கிடையாது. எனக்குப் புரிந்து போனது. அதாவது தடுப்பூசிகள் போடாத நோய் வாய்ப்புள்ள அவரது பண்ணைக்குப் புதிதாக அறிமுகமாகிய நோயுள்ள சேவலால் தான் இந்த நிலைமை தோன்றியிருக்கிறது.

ஒரு பண்ணைக்கு புதிதாக ஒரு விலங்கையோ,பறவையையோ அறிமுகப்படுத்தும் போது சில காலம் தனிமைப்படுத்த வேண்டும். உங்களுக்கு நினைவிருக் கும் கொரோனா காலத்தில் நோய் பரவலை தடுக்க நாட்டுக்குள் புதிதாக வெளிநாடுகளுக்களில் இருந்து வந்தவர்கள் 3 கிழமைகள் வரை தனிமைப்படுத்தப்பட்டதை. அது போலத்தான் விலங்குகளுக்கும் பறவைக

> "ஒரு பண்ணைக்கு புதிதாக ஒரு விலங்கையோ, பறவையையோ அறிமுகப்படுத்தும் போது சில காலம் தனிமைப்படுத்த வேண்டும். உங்களுக்கு நினைவிருக்கும் கொரோனா காலத்தில் நோய்ப் பரவலை தடுக்க நாட்டுக்குள் புதிதாக வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் 3 கிழமைகள் வரை தனிமைப்படுத்தப்பட்டதை. அது போலத்தான் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும்"



ளுக்கும். மேற்படி பண்ணையாளர் இப்படியான தனிமைப்படுத்தலை அந்த சேவலுக்கு செய்திருந்தால் அதன் நோயை அடையாளப் படுத்தியிருக்க முடியும்.



அநியாய மாக அவரின் ஏனைய கோழிகள் இறந் ததை தவிர்த்திருக்க முடியும். மேற்படி பண்ணையாளர், ரனிக்கட் நோய்க்குரிய தடுப்பூசியை வழங்கியிருந்தால் நோயை தவிர்த்திருக்க முடியும்.

இலங்கையில் ஓரளவுக்கு நாய் பூனைகள் மற்றும் மாடுகளுக்கு தடுப்பூசி வழங்கும் வகையில் கோழிகளுக்கு தடுப்பூசி வழங்குவதில் இடர்பாடு உள்ளது. சரியாக வழங்கப் படுவதில்லை. நாய் பூனைகளும் அரச மற்றும் தனியார் சிகிச்சை நிலையங்களில் தடுப்பூசி வழங்கப்படும் அதே வேளை மாடுகளுக்கு அரசாங்கம் கால்நடை வைத்திய அலுவலகங்கள. ஊடாக தடுப்பூசிகளை வழங்குகிறது. கோழிகளுக்கு சில வேளைகளில் அரச கால்நடை வைத்தியர் அலுவலகத்தினூடாக வழங்கப்பட்ட போதும் பெரும்பாலும் சகல கோழிகளுக்கும் தடுப்பூசிகள் கிடைப்பதில்லை. கோழிகளுக்கு வழங்கப்படும் தடுப்பூசி 1000, 500 கோழிகளுக்கு என்றுதான் விற்பனையில் உள்ளது. இதனால் 10, 20, 50,100 என கோழி வளர்ப்பவர்கள் தடுப்பூசிகளை பெறுவதில் இடர்பாடு உள்ளதால் அவற்றை வழங்காது விட்டு விடுகின்றனர். சில அரச, தனியார் கால்நடை அலுவலகங்கள் இந்த குறையை போக்க சனிக்கிழமைகளில் தடுப்பூசிகளை கரைத்து வழங்கும் போதும் முழு கோழிகளுக்கும் பயன் கிடைப்பதில்லை. உண்மையில் இறக்கும் கோழிகளோடு ஒப்பிடுகையில் தடுப்பூசிகளின் விலை மிகக் குறைவு.

கோழிகள் இலகுவில் நோய்ப்படக் கூடியவை. கோழிப் பண்ணைகளில் நோய்க் காரணிகள் வராத வகையிலான உயிர்ப் பாதுகாப்புக்கள் அவசியம். தடுப்பூசிகள் வழங்க வேண்டும். வெளியிலிருந்து வரும் மனிதர்கள், விலங்குகள், பூச்சிகள் என சகலதையும் கட்டுப்படுத்த வேண்டும். புதிய கோழிகளை அறிமுகப்



படுத்தும் போது சில வாரங்கள் தனிமைப் படுத்தி நோய் அறிகுறி இல்லையென்றால் மட்டுமே சேர்க்க வேண்டும். இலங்கையில் வாங்கி வளர்க்கப்படும் பெரும்பாலான கோழிக் குஞ்சுகள் (பாரிய பண்ணைகளில் மேற்படி உயிர் பாதுகாப்பு முறைகள் செய்யப்படுவதால் அங்கு இழப்புக்கள் குறைவு) வளர முதலே இறக்கின்றன. இதை நடைமுறையில் காணலாம்.

கோழிப்பண்ணையாளர்கள் பண்ணைக் கடைகளில் கோழிக்குஞ்சுகளை வாங்கும் போது ஒரு தொகை நுண்ணுயிர் கொல்லி மருந்துகளையும் அவர்கள் கொடுப்பார்கள். தடுப்பூசிகளை பற்றி கடைக்காரர்கள் மூச்சே விடமாட்டார்கள். கால்நடை வைத்தியரிடம் போக மாட்டார்கள். பெரும்பாலானவர்கள் தமது கோழிகளுக்கு நோய் வந்தால் மீளவும் பண்ணைக் கடைகளுக்கே போவார்கள். அவர்கள் இன்னுமின்னும் மருந்துகளைக் கொடுப்பார்கள். அவர்களுக்கு வியாபாரம். கோழிக்குஞ்சும் விற்கலாம். தீவனமும் விற்கலாம். மருந்தும் விற்கலாம். கோழிகள் இறக்க மீளவும் கோழிக் குஞ்சு விற்கலாம்.


வளர்க்கப்படும் பெரும்பாலான கோழிக் குஞ்சுகள் ஆரோக்கியமாக வளர்ந்தால் அவர்களுக்கு கோழிக்குஞ்சு வியாபாரம் நடக்காது. மருந்து வியாபாரம் நடக்காது. அவ்வளவுதான்.

எனவே பெரும்பாலான பண்ணைக்




கடைக்காரர்கள் தடுப்பூசி போன்ற நோய் தடுப்பு முறைகளைப் பற்றி சொல்ல மாட்டார்கள். உண்மையில் அதிகளவில் கொடுக்கப்படும் நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் மனித சுகாதாரத்துக்கும் கேடானது என்பதை பண்ணையாளரும் அறிவதில்லை. பண்ணைக் கடைக்காரர்களும் அறிவதில்லை என்பதே உண்மை. அத்துடன் வீடுகளில் அடை வைத்து பொரித்து வரும் கோழிக் குஞ்சுகளுக்கு பெரும்பாலும் தடுப்பூசிகள் வழங்கப்படுவதில்லை. இதுவும் தவறு. அந்த கோழிகளுக்கும் நோய்கள் ஏற்படும்.

எனவே, கோழி வளர்ப்பும் சரி எனைய விலங்குகள் வளர்ப்பும் சரி முறையான உயிர் பாதுகாப்பு மற்றும் நோய்த் தடுப்பு முறைகளை கொண்டு செய்யப்பட்டால் அவற்றின் இழப்புக்கள் ஏற்படாது. செலவும் அதிகம் ஏற்படாது. மனித சுகாதாரத்தையும் பாதிக்காது. எதையுமே வருமுன் காப்பதே சிறந்தது.



- அ.நிக்ஸன் -

# இந்திய ரூபாவின் பயன்பாடு டொலர் பிரச்சினைக்கு தீர்வா?

உக்ரைன் போரினால் ரஷ்யாவின் ரூபிள் வீழ்ச்சியடைந்து பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருக்கும் சூழலில், அமெரிக்க டொலருக்கு எதிராகப் பதினெட்டு நாடுகளுடன் இணைந்து இந்திய ரூபாவில் சர்வதேச வர்த்தகத்தை மேற்கொள்ளும் ஏற்பாடுகளைப் புதுடில்லி முன்னெடுக்கிறது.

இந்திய ரூபாவை சர்வதேசச் சந்தையில் பயன்படுத்துவது குறித்துக் கடந்த ஆண்டு யூலை மாதம் இந்திய ரிசர்வ் வங்கி ஆரம்ப முயற்சியை மேற்கொண்டது. இந்திய மத்திய இணை நிதியமைச்சர் பகவத் காரத் நாடாளுமன்றத்தில் இதுபற்றி ஏற்கனவே அறிவித்திருந்தார். “சர்வதேச நாணயமாக மாறுவதன் முதற்படியாக இந்தியாவின் மத்திய வங்கி – ரஷ்யா, இலங்கை உட்படப் பதினெட்டு நாடுகளில் உள்ள அறுபது வங்கிகளில் இந்திய ரூபாயில் பணம் செலுத்துவதற்கு சிறப்பு ஏற்பாடாக வோஸ்ட்ரோ (Vostro) கணக்குகளை ஆரம்பிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.

குறிப்பாக அமெரிக்க டொலர், யூரோ உட்பட அனைத்து வெளிநாட்டு நாணயங்களுக்கும் பதிலாக இந்திய ரூபாய் நாணயத்தில் வெளிநாட்டு வர்த்தகத்திற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள இரண்டு இந்திய வங்கிகளில் ஒன்பது சிறப்பு வோஸ்ட்ரோ கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன.

“வோஸ்டோ” கணக்கு என்பது ஒரு உள்நாட்டு வங்கி வெளிநாட்டு வங்கிக்காக உள்நாட்டு வங்கியின் நாணயத்தில்



வைத்திருக்கும் கணக்கு. ஏற்றுமதியை ஊக்குவித்து இறக்குமதியை எளிதாக்கும் ஓர் ஏற்பாடாகும். அதாவது சர்வதேச வர்த்தகத்தில் இந்திய ரூபாவைப் பயன்படுத்துவதற்குரிய வழிமுறை. இதனை இந்திய மத்திய வங்கி தயாரப்படுத்தியுள்ளது. சர்வதேசச் சந்தையில் அமெரிக்க டொலர் ஆதிக்கத்தில் இருந்து விடுபட விரும்பும் நாடுகளைக் கூட்டுச் சேர்க்கும் ரஷ்ய – இந்திய அரசுகளின் முயற்சி தற்போது சாதகமாகியுள்ளது. இந்திய ரூபாய் பரிவர்த்தனை மூலம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மேற்கொள்ளப்பட்டால், இந்தியாவிற்குக் கூடுதல் லாபம் கிடைக்கும். அந்த இலாபம் ஏற்றுமதியை மேலும் அதிகரிக்கும். ரூபாய் – ரூபிள் வர்த்தகத்திற்கான வழிமுறையை எளிதாக்க இந்திய மத்திய வங்கி ஒப்புக்கொண்டுள்ளது என்றும் மேலும் சில தனியார் இந்திய வங்கிகளும் ஆர்வம் காட்டி வருவதாகவும் இந்திய ஏற்றுமதி அமைப்புகளின் தலைவர் ஏ.சக்திவேல் கூறியுள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரஷ்ய ரூபிள் மதிப்பு, எண்பதில் இருந்து நூற்றுப் பத்தொன்பதாக வீழ்ச்சியடைந்தது. ஒரு வாரத்தில் ஏறத்தாழ இருபத்தொன்பது வீத சரிவை ரஷ்ய ரூபிள் சந்தித்தது. தனது நாணயத்தை மாத்திரம் பயன்படுத்திக் கூடுதல் வர்த்தகச் செயற்பாட்டில் ஈடுபட்டு வல்லரசுக்கான அங்கீகாரத்தைச் சீனா நெருங்கிவிட்டது. கடந்த ஒரு வருடமாக இடம்பெறும் போரினால் பாதிப்புக்கள் ஏற்பட்டாலும் ரஷ்யா நிமிர்ந்து நிற்பதற்குப் பின்னால் சீனா மூல காரணியாகவுள்ளது.




> “இந்திய ரூபாய்களைச் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தி இலங்கையின் டொலர் நெருக்கடியைக் குறைக்கும் நுட்பங்களை மிகச் சாதுரியமாக நகர்த்துவதன் மூலம் டில்லியை ரணில் கையாளுகின்றார்.”

இக் காரண காரியத்துடன் இந்திய ரூபா பயன்பாடும் ரஷ்ய ஆதரவுடன் உலகில் அறிமுகமாகிறது.

இப் பின்புலத்திலேதான், இந்திய ரூபாயில் இருதரப்பு வர்த்தகம் மேற்கொள்ள இலங்கை அரச வங்கி ஒன்றும் இந்திய மத்திய வங்கியில் வோஸ்ட்ரோ கணக்கைக் கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்துள்ளது. வோஸ்ட்ரோ கணக்கைத் திறப்பதன் மூலம் இலங்கையிலுள்ள ஒருவர் பத்தாயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்திய ரூபாயை வைத்திருக்க முடியும் என அறிவிக்கப்பட்டுமிருந்தது. இந்திய - இலங்கை மக்கள் தமக்கிடையே சர்வதேச கொடுக்கல் - வாங்கல்களின் போது, இந்திய ரூபாவைப் பயன்படுத்த முடியும் எனவும் இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஆனால் இந்திய - இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையிலான ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்துக்கு மாத்திரமே இந்திய ரூபாவைப் பயன்படுத்த முடியுமெனப் பொருளியல்துறைப் பேராசிரியர் கோ.அமிர்தலிங்கம் கூறுகிறார். ஏனெனில் சீனாவுடனான வர்த்தகத்தில் இந்திய ரூபாவைப் பயன்படுத்த முடியாது என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார். ஆனால் டொலருக்குப் பதிலாக இந்திய ரூபாயில் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடுவது தொடர்பாக தெற்காசிய நாடுகளுடன் இந்திய மத்திய வங்கி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது என்றும் மலேசிய அரசுடன் சென்ற வாரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்றும் இந்திய மத்திய வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளார்.

டொலருக்குப் பதிலாக ரூபாயில் வர்த்தகம் செய்வதற்கான வாய்ப்பை இந்தியா உருவாக்கி வருகிறது. இந்தக் கட்டமைப்பு வரும் ஆண்டுகளில் அதிக முக்கியத்துவம் பெறும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். எனினும் அமெரிக்காவினால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட ரஷ்யா, ஈரான் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா வர்த்தகத்தில் ஈடுபடுவதும் சிக்கல் நிறைந்ததாக இருக்கும் சூழலில், இந்திய ரூபாயில் சர்வதேச வர்த்தகத்தை மேற்கொள்வது குறித்து ஆளுநர் சக்திகாந்த தாஸ் நம்பிக்கை வெளியிட்டிருப்பது இந்தோ - பசுபிக் பிராந்திய அரசியலில் பெரும் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய ஆபத்துக்கள் உண்டு.

இருந்தாலும் இந்த ஆபத்துக்களை இல்லாமல் செய்து ஏற்றுமதி - இறக்குமதி தொடர்பான பணப் பரிவர்த்தனையை ரூபாயிலேயே மேற்கொள்வதற்கான கட்டமைப்புகளை இந்திய மத்திய வங்கி மேலும் விரிவுபடுத்தியும் வருகின்றது.

இந்த முயற்சி தற்போது கைகூடியுள்ளதாகவே இந்திய ஏற்றுமதி இறக்குமதியாளர்கள் நம்புகின்றனர். இதன் மூலம் இந்திய ரூபாய் சர்வதேச நாணயமாக மாறுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பும் இந்தியாவுக்கு உண்டு. ஆனால் புவிசார் அரசியல் - பொருளாதார உத்திகளை வேறொரு வகிபாகத்தில் அமெரிக்கா கையாள முற்படுமாக இருந்தால், இலங்கை, நேபாளம் போன்ற சிறிய நாடுகள் அமெரிக்காவுக்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடிய சந்தர்ப்பங்களை மறுப்பதற்கில்லை. ஏற்கனவே பாகிஸ்தான் அமெரிக்கா பக்கம் நிற்கிறது.

ஆனாலும் இந்திய ரூபாயில் சர்வதேச வர்த்தகத்தை மேற்கொள்ள சீனா உடன்படாது. எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பு நாடாகப் பிரித்தானியா இருந்த போது, சர்வதேச வர்த்தகச் செயற்பாடுகளில் யூரோ நாணயத்தைப் பயன்படுத்தாமல் தமது பவுன்ஸ் நாணயத்தில் மாத்திரம் பிரித்தானியா ஈடுபட்ட உத்தியைச் சீனவும் கையாளக்கூடும். அதாவது தெற்காசியப் பிராந்தியத்தில் சீனா, தனது நாணயத்தில் மாத்திரம் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டுக் கொண்டு இந்திய ரூபாவில் ஏனைய நாடுகள் வர்த்தகத்தில் ஈடுபடுவதை அனுமதிக்க விரும்பக்கூடும்.

ஏனெனில் சீன - ரஷ்ய உறவு என்பது ஆழமானது. இந்த உறவுதான் இந்தியாவுக்கும் பாதுகாப்பானது. இந்தப் பாதுகாப்புக்குள் இலங்கையும் இணையுமா? இல்லையா? என்பதைத் தற்போது அனுமானிக்க முடியாது. ஏனெனில் இந்தியாவைக் கடந்து அமெரிக்க, சீன அரசுகளுடன் சமாந்தரமான - நேரடியான உறவைப் பேண வேண்டும் என்பதே இலங்கை ஆட்சியாளர்களின் நீண்டகால விருப்பம்.

இந்திய ரூபாவைச் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தும் இந்திய - ரஷ்ய வியூகம், டொலருக்கு ஆபத்து என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஐரோப்பிய ஒன்றியம் யூரோ நாணயத்தைப் பயன்படுத்துவதும் அமெரிக்க டொலருக்குத் தொடர்ச்சியான விழ்ச்சிதான். இருந்தாலும் வேறு வகையான அணுகுமுறைகள் மூலம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடனான உறவை அமெரிக்காவினால் பேண முடிகிறது. ஆனால் அதேபோன்று தெற்காசிய நாடுகளுடன் அமெரிக்காவுக்கு வேறு வழியிலான அணுகுமுறைகளைப் பின்பற்றுவது கடினம்.

இக் காரணங்களினால் அமெரிக்க - இந்திய உறவும், இரசிய இந்திய உறவும். சீன, இந்திய உறவும் எதிர்காலத்தில் பல பரிமாணங்களில் முரண்பாடான ஒழுங்கற்ற அரசியல் தன்மையை உருவாக்கலாம். அந்த ஒழுங்கற்ற அரசியல் தன்மைக்குள் இலங்கை நிலையைத் தக்கவைப்பதில், ரணிலின் பார்வை அமெரிக்காவை நோக்கியதாகவே நீளுகிறது. சீனாவை நோக்கிய நம்பிக்கையும் ரணிலுக்கு உண்டு.

அதேநேரம் இந்திய ரூபாய்களை சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தி இலங்கைத்தீவின் தற்போதைய டொலர் நெருக்கடியைக் குறைக்கும் நுட்பங்களை நகர்த்துவதன் மூலம் மிகச் சாதுரியமாக டில்லியை ரணில் கையாளுகின்றார்.




இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.05.2023இல் வெளியிடப்பெற்றது.